Adda247 TNPSC Civil Judge Exam

வினாத்தொகுப்புக் குறியீடு : **AAA**

பதிவு எண் | | | | | | | | | |

**2019**

பட்டப்படிப்புத் தரம்

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : **100**

**வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு. **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்கும் முன் இவ்வினாத் தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையேனும் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை. ஒவ்வொரு தவறான விடைக்கும் 0.25 மதிப்பெண் வீதம் கழிக்கப்படும்.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்க வழங்கப்படும்.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு குறியீட்டை (Question Booklet Code) விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். வினாத் தொகுப்பு குறியீட்டை விடைத்தாளில் முறைய்ாக குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியெனக் கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். உதாரணமாக, நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ

9. ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும்.
10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் உள்ள பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத் தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித் குறிப்புகளையும் எழுதக் கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
12. அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளே முடிவானவை.
13. நீங்கள் விடையளிக்காமல் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கையை விடைத்தாளின் பக்கம் இரண்டில் அதற்கென உரிய கட்டத்தில் எழுதி நிரப்பவேண்டும். இதற்கென கூடுதலாக ஐந்து நிமிடங்கள் வழங்கப்படும்.
14. வினாத்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தின் பெயர், இடம், கட்சிக்காரர்களின் பெயர் உள்ளிட்ட தகவல்கள் கற்பனையானவை, அவை உண்மையானவையாகவோ, சட்டரீதியாக சரியானவையாகவோ இல்லாமல் இருக்கலாம். இருப்பினும், நீங்கள் வேறு வகையில் விளக்கம் கொள்ளாமல் விடையளிக்கும் நோக்கத்தின் பொருட்டு அவை உண்மையானவை எனக் கருத வேண்டும்.
15. கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையிலேயே நீங்கள் பதிலளிக்க வேண்டும். நீங்கள் கூடுதல் தகவல்களை யூகிக்கவோ, அனுமானிக்கவோ கூடாது.
16. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

SPACE FOR ROUGH WORK

Adda247

1. Which of the following is true with respect to 'Right to be Forgotten' in Indian context?

Statement No. I : The Karnataka High Court, in a judgment, recently has approved the 'Right to be Forgotten' in Indian context.

Statement No. II : It allows offenders to object to the publication of information regarding their crime and conviction.

Statement No. III : The origin of this right can be traced back to the French jurisprudence on the 'right to oblivion'.

Statement No.IV : The "Right to be Forgotten" can be inferred from the provisions of the Information Technology (IT) Act 2000 (amended in 2008) as well as from the IT Rules, 2011.

(A) I and II
(B) I, II, III
(C) I, II, IV
(D) All the above

"மறக்கப்படவேண்டிய உரிமை" சம்பந்தமாக இந்தியச் சூழலில் கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?

கூற்று I : இந்தியாவில் "மறக்கப்படவேண்டிய உரிமையை" கர்நாடக உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பில் சமீபத்தில் அங்கீகரித்து இருக்கிறது.

கூற்று II : குற்றவாளிகளுக்கு அவர்கள் செய்த குற்றம் மற்றும் தண்டனை பற்றிய விபரங்களை வெளியிடுவதை ஆட்சேபிக்க "மறக்கப்படவேண்டிய உரிமை" அனுமதி அளிக்கிறது.

கூற்று III : இந்த உரிமையானது மறதிக்கான உரிமை சம்பந்தமான பிரெஞ்சு சட்டவியலிலிருந்து கண்டறியப்பட்டது.

கூற்று IV : மறதிக்கான உரிமையை தகவல் தொழில் நுட்பச் சட்டம் 2000 (2008 ல் திருத்தப்பட்டது) மற்றும் அதன் விதிகளிலிருந்து அனுமானித்துக் கொள்ளலாம்.

(A) கூற்று I மற்றும் II
(B) கூற்று I, II மற்றும் III
(C) கூற்று I, II மற்றும் IV
(D) மேலே கண்ட அனைத்தும்



Adda247

2. By considering the shortage of labour for agricultural purpose, the State Government enacted a law to prohibit engagement of agricultural labour in the manufacture of Bidis. Choose the most appropriate response on the Constitutional validity of the law?

(A) Since labourers would not be available for agricultural purposes, there can be shortage of food grains and wastage of crops. Hence it is a reasonable restriction.

(B) The object sought to be achieved is to keep sufficient labour supply for agricultural purpose, which could have been easily achieved by restraining the employment of agricultural labour in Bidi manufacturing during the agricultural season only. Absolute restriction amounts to withdrawal of the right. Hence, the law is unconstitutional.

(C) Law imposes an unreasonable restriction as it indirectly makes the two sectors (manufacture of Bidis and agriculture) alternative options for the labourers where as some people would like to work in both of these.

(D) Bidis are harmful for health of people. Hence any law preventing people from engaging in manufacture of Bidis is in the interest of public.

விவசாயத்திற்கு வேலை ஆட்கள் கிடைக்கவில்லை என்பதை கருத்திற் கொண்டு, விவ்சாயத் தொழிலாளர்களை பீடி உற்பத்தி செய்யும் தொழிலுக்கு பயன்படுத்துவதை தடை செய்யும் சட்டத்தை மாநில அரசு இயற்றியது. அரசியலமைப்புச் சட்டத்தின்படி அச்சட்டம் செல்லுபடியாகும் தன்மை குறித்து உரிய பதிலை தேர்வு செய்க.

(A) விவசாயத்திற்கு தொழிலாளர்கள் கிடைக்காவிட்டால், உணவு தானியங்களில் பற்றாக்குறை ஏற்படும் மற்றும் பயிர்கள் சேதமாகும். ஆகவே அது நியாயமான கட்டுப்பாடு ஆகும்.

(B) வேளாண்மை பருவத்தில் மட்டும் பீடி உற்பத்திக்கு விவசாய தொழிலாளர்கள் ஈடுபடுத்துவதை தடை செய்வதால் வேளாண் தொழிலுக்கு தேவையான தொழிலாளர்களை கொடுக்கும் நோக்கம் நிறைவேறும். முழுமையான கட்டுப்பாடுதான் உரிமையை திரும்ப பெறுவது போல் ஆகிவிடும். ஆகவே அந்த சட்டம் அரசியலமைப்புக்கு எதிரானது.

(C) கொஞ்சம் தொழிலாளர்கள் இரு தொழில்களையும் செய்ய விரும்புவார்கள். இச் சட்டம் இரு பிரிவு தொழிலாளர்களையும் மாற்று விருப்பத்திற்கு மறைமுகமாக வழி வகை செய்வதால் இச்சட்டம் நியாயமற்ற கட்டுப்பாட்டை விதிக்கிறது.

(D) பீடி, மக்களின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் ஆகவே பீடி உற்பத்திக்கு மக்களை பயன்படுத்துவதை தடைசெய்யும் சட்டம் பொது மக்களின் நலனுக்காகவே இயற்றப்படுகிறது.

3. The pardoning power given to the President of India under Article 72 of the Constitution of India can be exercised

(A) After the trial and on conviction and award of sentence

(B) During or after trial but never before trial

(C) At any time before, during or after the trial

(D) Either before or after the trial but never during the trial of the case

அரசியலமைப்பு சட்டத்தின் ஷரத்து 72ன் கீழான மன்னிக்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் கீழ்க்கண்ட எந்த சூழ்நிலையில் பயன்படுத்தலாம்?

(A) வழக்கின் விசாரணை, குற்றவாளி என தீர்மானித்தல் மற்றும் தண்டனை கொடுக்கப்பட்ட பின்னர்

(B) வழக்கின் விசாரணையின் போது அல்லது விசாரணைக்கு பின்னர். ஆனால் வழக்கு விசாரணைக்கு முன்னர் பயன்படுத்த முடியாது

(C) வழக்கு விசாரனைக்கு முன்னர், வழக்கு விசாராணையின் போது அல்லது வழக்கு விசாரணைக்கு பின்னர் எந்த கட்டத்திலும்

(D) வழக்கு விசாரணைக்கு முன்னரோ அல்லது பின்னரோ ஆனால் வழக்கு விசாரணையின் போது பயன்படுத்த முடியாது

Adda247

4. Identify the ground that is not available to proclaim emergency under Article 352 of Indian Constitution.

(A) Armed Rebellion
(B) War
(C) External Aggression
(D) Internal disturbance

அரசியலமைப்பு சட்ட ஷரத்து 352ன் கீழ் கீழ்க்கண்ட எந்த காரணத்தின் அடிப்படையில் நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்த முடியாது?

(A) ராணுவ புரட்சி
(B) போர்
(C) வெளிநாட்டின் ஆக்கிரமிப்பு
(D) உள்நாட்டு கலகம்

5. Which one of the following statements about the meaning of the "eminent domain" under the Constitution of India is correct?

Statement No. 1: Sovereign power of the state to acquire private property of an individual for public purposes after paying compensation.

Statement No. 2: Power of the state to arrest an individual

Statement No. 3: power of the state for requisition.

(A) Statements 2 and 3 are correct (B) Statement 3 alone is correct

(C) Statement 1 alone is correct (D) Statement 2 alone is correct

அரசியலமைப்பு கூடத்தின் கீழ் "சொத்தெடுப்பு உரிமை" என்ற கோட்பாடு சம்பந்தமான கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 : இழப்பீடு கொடுத்த பின்னர் பொது நோக்கத்திற்காக தனி நபரின் சொத்தை கையகப்படுத்துவதற்கு ஒரு மாநில அரசின் இறையாண்மை அதிகாரம்

கூற்று 2 : ஒரு நபரை கைது செய்வதற்கு ஒரு மாநில அரசுக்குரிய அதிகாரம்

கூற்று 3 : வேண்டுகோள் விடுப்பதற்கு ஒரு மாநில அரசுக்குரிய அதிகாரம்

(A) கூற்று 2 மற்றும் 3 சரியானது (B) கூற்று 3 மட்டும் சரியானது

(C) கூற்று 1 மட்டும் சரியானது (D) கூற்று 2 மட்டும் சரியானது

6. In case of guarantee, liability of the surety is

(A) Primary as compared to that of the principal debtor

(B) Secondary as compared to that of the principal debtor

(C) Co-extensive with that of the principal debtor

(D) Both (A) and (C)

ஒரு பொறுப்புறுதியில், ஒரு பிணையதாரரின் பொறுப்பு

(A) பிரதான கடனாளரின் பொறுப்புடன் ஒப்பிடும் போது பிரதானமானது ஆகும்

(B) பிரதான கடனாளரின் பொறுப்புடன் ஒப்பிடும் போது இரண்டாம் நிலையே ஆகும்

(C) பிரதான கடனாளரின் பொறுப்புடன் ஒன்றிணைந்தது ஆகும்

(D) (A) மற்றும் (C) ஆகிய இரண்டும்

Adda247

7. Sasi & Co., a building contractor entered into an agreement with Sky Heights Housing Association to refurnish a block of 30 flats. This contract was subject to a liquidated damages clause if they did not complete the contract on time. Sasi & Co engaged Lokesh to do the carpentry work for an agreed price of Rs.50,000. After six months of commencing the work, Lokesh realised that he had priced the job too low and would be unable to complete at the originally agreed price. Sasi & Co. agreed to make additional payments of Rs. 1575 per flat. Lokesh worked for a further period of 6 weeks but only received an additional amount of Rs. 1000. He then ran out of money and refused to continue unless payment was made. Sasi & Co. engaged another carpenter to complete the contract and refused to pay Lokesh the further sums.

(A) The agreement to pay extra was unenforceable as there was no consideration for the subsequent agreement.

(B) Consideration was provided by Lokesh in the form of conferring a benefit on the Sasi & Co by helping them to avoid the penalty clause. Therefore, Sasi & Co was liable to make the extra payments promised.

(C) The consideration provided by Lokesh as to avoid the penalty clause was not main object of the contract. Therefore, Sasi & Co. was not liable to make the extra payments promised.

(D) Sasi & Co. is liable to pay compensation to Lokesh as they have committed a breach of contract by employing another carpenter.

சசி & கோ என்ற ஒரு கட்டிட ஒப்பந்தக்காரர் ஸ்கை ஹைட்ஸ் ஹவுசிங் அசோசியேசனுடன் 30 பிளாட்டுகள் உள்ள ஒரு பிளாட்டுக்கு மரச்சாமான் வேலை செய்து கொடுக்க ஒப்பந்தம் செய்தது. ஒப்பந்தத்தை உரிய காலத்தில் நிறைவேற்ற வில்லை எனில் ஒப்பந்தமானது முடிவு செய்யப்பட்ட நஷ்ட ஈடு ஷரத்தை உள்ளடக்கியிருந்தது. சசி & கோ தச்சுவேலை செய்ய லோகேஸ் என்பவரை நியமித்தது. அந்த வேலைக்கு ரூபாய் 50,000த்தை கொடுக்க ஒப்புக் கொண்டது. வேலையை ஆரம்பித்த ஆறு மாதத்திற்கு பின்னர், ஏற்கனவே ஒப்புக் கொண்ட தொகை மிக குறைவானது என்றும், அந்த தொகையில் வேலையை முடிக்க முடியாது என்றும் லோகேஸ் உணர்ந்தார். ஒரு பிளாட்டுக்கு ரூ.1,575 ஐ கூடுதலாக கொடுக்க சசி & கோ ஒப்புக் கொண்டது. லோகேஸ் மேலும் ஆறு வாரங்களுக்கு வேலை செய்தார். ஆனால் கூடுதலாக ரூ.1,000 த்தை மட்டுமே பெற்றார். லோகேஸ் கட்டுப்படியாகாததால் ஒப்புக்கொண்ட கூடுதல் பணத்தை கொடுக்கவில்லை எனில் வேலை செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார். சசி & கோ வேலையை செய்ய வேறொரு தச்சரை ஈடுபடுத்தியதோடு, லோகேஸ்க்கு மேலும் பணத்தை கொடுக்க மறுத்து விட்டது.

(A) பின்னர் ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு மறுபயன் இல்லாததால், கூடுதல் தொகையை செலுத்த வேண்டும் என்று ஒப்பந்தத்தை நிறைவேற்ற இயலாது

(B) நஷ்ட ஈட்டை தவிர்ப்பதற்காக சசி & கோ விற்கு லோகேஸ் உதவியதே ஒப்பந்தத்திற்கான ஒரு மறுபயன் ஆகும். ஆகவே சசி & கோ ஒப்புக் கொண்டபடி கூடுதல் தொகையை கொடுக்க வேண்டும்.

(C) நஷ்ட ஈட்டு ஷரத்தை தவிர்க்க லோகேஸால் கொடுக்கப்பட்ட மறுபயன் ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் இல்லை. ஆகவே சசி & கோ ஒப்புக் கொண்டபடி கூடுதல் தொகையை கொடுக்க வேண்டியதில்லை

(D) வேறு ஒரு தச்சரை நியமித்து ஒப்பந்தத்தை மீறியதால் சசி & கோ லோகேஸுக்கு நஷ்ட ஈட்டை கொடுக்க வேண்டும்

8. What is a continuing guarantee?

(A) A guarantee which continues even after the contract comes to an end

(B) A guarantee which shall be applicable to any other person who becomes a party to the contract

(C) A guarantee which extends to a series of transaction

(D) A guarantee which continues till the contract does not come to an end

தொடர் பொறுப்புறுதி என்றால் என்ன?

(A) ஒப்பந்தம் முடிவடைந்த பின்னரும் தொடர்ந்து இருக்கும் ஒரு பொறுப்புறுதியே தொடர் பொறுப்புறுதி ஆகும்

(B) ஒப்பந்தத்தில் ஒரு தரப்பினராக ஆகும் எந்த ஒரு நபருக்கும் பொருந்தக் கூடிய பொறுப்புறுதியே தொடர் பொறுப்புறுதி ஆகும்

(C) ஒரு தொடர் நடவடிக்கைகளுக்கும் நீட்டிக்கக்கூடிய பொறுப்புறுதியே தொடர் பொறுப்புறுதி ஆகும்

(D) ஒரு ஒப்பந்தம் முடிவுக்கு வராத வரை தொடர்ந்து இருக்கும் பொறுப்புறுதியே தொடர் பொறுப்புறுதி ஆகும்

9. A wanted to sell his house to B and made an offer by e-mail to sell his house at 65 Lacs. On the same day, without knowledge of A's e-mail, B sent a e-mail to A informing him that he would like to buy the house for 65 lacs. Identify the correct statement:

(A) The contract is valid as both offer and acceptance have been made

(B) The contract is valid as both parties have agreed upon the same terms of agreement

(C) The contract is invalid as there is no acceptance

(D) The contract is invalid as there is no proper offer

Adda247

A என்பவர் அவர் வீட்டை B க்கு விற்க விரும்புகிறார். ரூபாய் 65 லட்சத்திற்கு விற்க தன் விருப்பத்தை மின்னஞ்சல் மூலமாக தெரிவிக்கிறார். அதே நாளில் A என்பவர் அனுப்பிய மின்னஞ்சலைப் பற்றி தெரியாமல், ரூ.65 லட்சத்திற்கு வீட்டை வாங்கிக் கொள்வதாக B என்பவர் A க்கு மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கிறார். கீழ்கண்டவற்றில் சரியான கூற்றை கண்டுபிடிக்கவும்.

(A) முனைவு மற்றும் ஏற்பு இருப்பதால் ஒப்பந்தம் செல்லும்

(B) இரு தரப்பினரும் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை ஒப்புக் கொண்டதால் அந்த ஒப்பந்தம் செல்லும்

(C) ஏற்பு இல்லாததால் ஒப்பந்தம் செல்லாது

(D) முறையான முனைவு இல்லாததால் ஒப்பந்தம் செல்லாது

10. Statement A: A surety is discharged from his liability under a contract of guarantee if the creditor does or omits to do something that results in impairment of a remedy available to the guarantor against the principal debtor in case of his default.

Statement B: The guarantor is invested with all the rights, which the creditor had against the principal debtor, after due payment and performance by him on behalf of the principal debtor on his default.

(A) The Statement A is true but Statement B is false

(B) Both Statement A and B are false

(C) Both Statement A and B are true and Statement B is the reason for Statement A

(D) Both Statement A and B are true but Statement B is not the reason for Statement A

கூற்று A : கடன் கொடுத்தவர் ஏதேனும் ஒன்றை செய்து அல்லது செய்யாமல் விட்டு, அது பிரதான கடனாளி அவரின் தவறுக்காக அவருக்கெதிராக பரிகாரம் தேடிக்கொள்ள பொறுப்புறுதியாளருக்குள்ள உரிமையை பாதிப்பதாக இருந்தால், பொறுப்புறுதி ஒப்பந்தத்திலிருந்து பொறுப்புறுதியாளர் விடுவிக்கப்படுவார்.

கூற்று B : பிரதான கடனாளி அவரின் தவறுகையின் பேரில் அவருக்காக, பொறுப்புறுதியாளர் தொகையை கொடுத்த பின்னர் மற்றும் ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பின்னர், பிரதான கடனாளிக்கு எதிராக கடன் கொடுத்தவருக்குரிய அனைத்து உரிமைகளும் பொறுப்புறுதியாளருக்கு இருக்கிறது

(A) கூற்று A சரியானது. ஆனால் கூற்று B தவறானது

(B) கூற்று A மற்றும் B தவறானது

(C) கூற்று A மற்றும் B சரியானது கூற்று B கூற்று Aக்கான ஒரு காரணம் ஆகும்

(D) கூற்று A மற்றும் B சரியானது. ஆனால் கூற்று B கூற்றுக்கு Aக்குரிய காரணம் இல்லை

11. Which of the following is not true in respect of contract of pledge?

(A) A pawnee cannot retain the goods for recovering extraordinary expenses

(B) A pawnee can exercise the right of lien and right to sue simultaneously

(C) A pawnee may sell the goods on default of the pawnor without giving notice to the pawnor

(D) A pawnee has a security interest which can be enforced even against the State

அடகு பற்றிய கீழ்கண்டவற்றில் எது சரியல்ல?

(A) அசாதாரண செலவுகளை வசூலிப்பதற்காக அடகு பிடிப்பவர் பொருட்களை தன்னிடமே வைத்திருக்க முடியாது

(B) பற்றுரிமை மற்றும் வழக்கிடும் உரிமை ஆகியவை ஒரே நேரத்தில் அடகு பிடிப்பவருக்கு இருக்கிறது

(C) அடகு வைத்தவர் பணத்தை செலுத்த தவறினால் அடகு வைத்தவருக்கு அறிவிப்பு கொடுக்காமலேயே அடகு பிடிப்பவர் பொருட்கள் விற்கலாம்

(D) அடகு பிடிப்பவருக்கு பாதுகாக்கப்பட்ட (உத்திரவாத) நலன் இருக்கிறது. அதை அவர் அரசுக்கெதிராகக்கூட செயல்படுத்தலாம்

12. If a promisee accepts an anticipatory breach committed by the promisor, then

(A) The promisee need not perform his part of the contract but he cannot claim damages from the promisor

(B) The promisee need not perform his part of the contract but he can claim damages from the promisor only after the date of performance

(C) The promisee need not perform his part of the contract but he can claim damages from the promisor without waiting till the date of performance

(D) The promisee must perform his part of the contract before claiming damages from the promisor

உறுதிமொழி கொடுப்பவர் ஒப்பந்தத்தை முன்கூட்டியே மீறுவதை உறுதிமொழி கொடுக்கப்பட்டவர் ஏற்றுக்கொண்டால்

(A) உறுதிமொழி கொடுக்கப்பட்டவர் அவர் தரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்ற தேவையில்லை. ஆனால் அவர் உறுதிமொழி கொடுப்பவரிடமிருந்து நஷ்ட ஈட்டை கோரமுடியாது

(B) உறுதிமொழி கொடுக்கப்பட்டவர் அவர் தரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்ற தேவையில்லை. ஆனால் அவர் தரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்றினால் மட்டுமே உறுதி மொழி கொடுத்தவரிடமிருந்து நஷ்ட ஈட்டை கோரலாம்

(C) உறுதி மொழி கொடுக்கப்பட்டவர் அவர் தரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்ற தேவையில்லை. ஆனால் அவர் நிறைவேற்றத்திற்கான தேதிவரை காத்திராமல் உறுதிமொழி கொடுத்தவரிடமிருந்து நஷ்ட ஈடு கோரலாம்

(D) உறுதிமொழி கொடுத்தவரிடமிருந்து நஷ்ட ஈட்டை கோருவதற்கு முன்னர் உறுதிமொழி கொடுக்கப்பட்டவர் அவர் தரப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும்

Adda247

13. Can the legal representative of a deceased person negotiate a negotiable instrument payable to order by delivery only which was endorsed by the deceased but not delivered by him?

(A) The legal representative can negotiate the instrument by delivery only

(B) The legal representative has to re-endorse it and deliver the instrument to effect a valid transfer

(C) A negotiable instrument endorsed by a deceased cannot be transferred any further

(D) A negotiable instrument endorsed by a deceased is a void instrument

இறந்தவரால் மேற்குறிப்பு செய்யப்பட்ட ஆனால் அவரால் ஒப்படைக்கப்படாத ஒரு மாற்றுமுறை ஆவணத்தை அவரின் சட்டபூர்வ பிரதிநிதி, உத்தரவிடும் நபருக்கு பணம் செலுத்த வேண்டும் என்று ஒப்படைப்பின் மூலம் மட்டுமே மாற்ற முடியுமா?

(A) சட்டபூர்வ பிரதிநிதி ஒப்படைப்பின் மூலம் மட்டுமே ஆவணத்தை மாற்றமுடியும்

(B) சட்டப்பூர்வ பிரதிநிதி அதில் மீண்டும் மேற்குறிப்பு செய்து அதை செல்லத்தகுந்த உரிமை மாற்றம் செய்வதற்கு ஒப்படைக்க வேண்டும்

(C) இறந்தவரால் மேற்குறிப்பு செய்யப்பட்ட ஒரு மாற்று முறை ஆவணத்தை மாற்றம் செய்ய முடியாது

(D) இறந்தவரால் மேற்குறிப்பு செய்யப்பட்ட ஒரு மாற்றுமுறை ஆவணம் ஒரு செல்லாத ஆவணம் ஆகும்.

14. Amol issues a cheque for Rs 1000/- to an NGO as donation. The cheque was returnedunpaid with reasons "Funds Insufficient"

Choose the correct option :

(A) The NGO can file a criminal complaint against Amol under sec-138 of N.I Act

(B) No criminal complaint can be filed under section 138 of NI Act as the cheque was not issued for any discharge of legally enforceable debt

(C) Criminal complaint can be filed only if it was returned for the second time

(D) The NGO can file criminal complaint only after it has given a 15 days' notice to Amol to pay the amount

அமல் என்பவர் ஒரு அரசு சாரா அமைப்புக்கு நன்கொடையாக ரூ.1000/–க்கான ஒரு காசோலையை கொடுத்தார். "போதிய பணமில்லை" என்ற காரணத்துடன் அந்த காசோலை பணமாகாமல் திரும்பிவிட்டது.

சரியான விடையைத் தேர்வு செய்க :

(A) மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் அமலுக்கெதிராக அரசு சாரா அமைப்பு ஒரு குற்றப்புகாரை தாக்கல் செய்யலாம்

(B) சட்டபூர்வமாக கொடுக்கப்பட வேண்டிய கடனுக்கு காசோலை கொடுக்கப்படாததால் குற்றப்புகாரை மாற்றுமுறை ஆவணசட்டப் பிரிவு 138ன் கீழ் தாக்கல் செய்ய முடியாது

(C) காசோலை இரண்டாம் தடவை திரும்ப வந்தால் மட்டுமே குற்றப்புகாரை தாக்கல் செய்யமுடியும்

(D) பணத்தை செலுத்தும்படி 15 நாள் அறிவிப்பு கொடுத்த பின்னர் தான் அரசு சாரா அமைப்பு குற்றப்புகாரை தாக்கல் செய்ய முடியும்.

Adda247

15. Contribution to the mortgage debt means ———————— payment of debts to different properties of distinct and separate rights.

(A) equal

(B) distinct and separate

(C) proportionate

(D) rateable

தனித்துவமான மற்றும் தனித்தனியான உரிமைகள் உள்ள பல சொத்துகளுக்கு கிழ்கண்டவற்றில் எந்த வகையான பணம் செலுத்தல் அடமானக் கடனுக்குரிய பங்களிப்பை குறிக்கும்?

(A) சமமான முறையில் பணம் செலுத்தல்

(B) தனித்துவமான மற்றும் தனித்தனியான முறையில் பணம் செலுத்தல்

(C) விகிதப்படி பணம் செலுத்தல்

(D) தகுதியின் அடிப்படையில் செலுத்தல் (Rateable)

16. A litigation commences from the date of ————————.

(A) Cause of action

(B) Presentation of plaint before the court

(C) From the date of receipt of summons by defendant

(D) From the date of numbering of plaint

எந்த தேதியிலிருந்து ஒரு வழக்கு தொடங்குகிறது?

(A) வழக்கு மூலம்

(B) நீதிமன்றத்தில் பிராதை தாக்கல் செய்யும் தேதி

(C) பிரதிவாதி அழைப்பாணையை பெற்றுக்கொண்ட தேதி

(D) பிராது கோப்புக்கு எடுக்கப்பட்ட தேதி

17. "A" gives a lakh of rupees to B. Reserving to himself with B's assent, the right to take at pleasure Rs. 10,000/- out of one lakh. Examine legality of this gift.

(A) Whole of the gift is void

(B) Voidable

(C) Onerous gift

(D) The gift holds good as to Rs.90,000/- but is void as to Rs.10,000

A என்பவர் B க்கு ரூபாய் ஒரு இலட்சத்தை கொடுக்கிறார். B ன் சம்மதத்துடன் ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூ.10,000/த்தை A எடுத்துக்கொள்ளும் உரிமையை A தக்க வைத்துக் கொள்கிறார். கொடையின் செல்லுபடியாகும் தன்மை குறித்து பதில் அளிக்கவும்

(A) முழுக்கொடையும் செல்லாது

(B) கொடையை தவிர்க்கலாம்

(C) பொறுப்பு நிறைந்த கொடை

(D) ரூ.90,000/த்தை பொறுத்தவரை கொடை செல்லும். ஆனால் ரூ.10,000/த்தை பொறுத்தவரை கொடை செல்லாது

18. In which of the following cases, the Doctrine of 'lis pendens' will not apply

(A) suit results in consent/compromise decree

(B) suit decided ex parte

(C) friendly suits brought by agreement of parties to obtain declaration of their rights

(D) during pendency of writ petition

கீழ்கண்டவற்றில் எதில் நிகழ்நிலை வழக்கு கோட்பாடு பொருந்தாது?

(A) இசைவு அல்லது சமாதான தீர்ப்பில் வழக்கு முடிவடைதல்

(B) ஒரு தலைபட்சமாக வழக்கை தீர்மானிக்கும் போது

(C) தரப்பினர் அவர்களின் உரிமைகளை விளம்புகை படுத்துவதற்காக ஒப்பந்தம் மூலம் சினேக முறையில் தாக்கல் செய்யப்படும் வழக்கு

(D) நீதிப்பேராணை மனு நிலுவையில் இருக்கும் போது



Adda247

19. Statement 1: Gift deed of immovable property value of less than Rs. 100 requires compulsory attestation by witnesses and registration.

Statement 2 : Necessity for examining the attesting witness arises only when the gift deed is specifically denied.

Statement 3 : Irrespective of the fact whether the gift deed is denied or not, examining the attesting witness is a condition precedent.

Which of the above statement is correct?

(A) All the three are correct

(B) 1 and 2 are correct

(C) 1 and 3 are correct

(D) 2 and 3 are correct

கூற்று 1 : 100 ரூபாய்க்கு குறைவான மதிப்புடைய அசையா சொத்து சம்பந்தமான நன்கொடை ஆவணம் சாட்சிகளால் கண்டிப்பாக சான்றொப்பம் இடப்பட வேண்டும் மற்றும் பதிவு செய்யப்பட வேண்டும்

கூற்று 2 : நன்கொடை ஆவணத்தின் நிறைவேற்றம் குறித்து குறிப்பாக மறுக்கும்போது, சாட்சி கையொப்பம் இட்ட நபரை விசாரிக்க வேண்டும்.

கூற்று 3 : நன்கொடை ஆவணத்தின் நிறைவேற்றம் குறித்து மறுக்கப்பட்டாலும் அல்லது இல்லாவிட்டாலும், சாட்சி கையொப்பம் இட்ட நபரை விசாரிக்க வேண்டியது ஒரு முன் நிபந்தனை ஆகும்.

கீழ் கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) மேற்கூறிய மூன்று கூற்றுகளும் சரியானது

(B) கூற்று 1 மற்றும் 2 மட்டும் சரியானது

(C) கூற்று 1 மற்றும் 3 மட்டும் சரியானது

(D) கூற்று 2 மற்றும் 3 மட்டும் சரியானது

20. Ramesh, an advocate, takes up a private employment. Ram, his erstwhile client approaches him for legal advice and the same is given by Ramesh. Later in a criminal proceeding, Ramesh was called upon to disclose his communication with Ram. Ramesh also disclosed the same in court

(A) Ramesh's evidence is privileged under Section 122 of Indian Evidence Act

(B) Ramesh's evidence is not privileged under Section 122 of Indian Evidence Act

(C) Ramesh has waived his privilege under Section 122 of Indian Evidence Act and so it can be received in evidence

(D) Ramesh can give evidence only after seeking permission from the Court

ரமேஷ் என்ற வழக்கறிஞர் ஒரு தனியார் வேலையில் சேர்கிறார். ராம் என்ற அவரின் முன்னால் கட்சிக்காரர் சட்ட அறிவுரை கேட்க ரமேஸ்ஷ அணுகுகிறார். ரமேஷீம் அறிவுரை வழங்கினார். பின்னாலில் ஒரு குற்ற நடவடிக்கையில், மேற்கூறிய இருவருக்கும் இடையே உள்ள தகவல் பரிமாற்றத்தை வெளியிடும்படி ரமேஷ் என்பவர் அழைக்கப்படுகிறார் ரமேஷ் தகவலை நீதிமன்றத்தில் வெளியிடுகிறார்

(A) ரமேஷ் என்பவரின் சாட்சியம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 122–ன் கீழ் பாதுகாக்கப்பட்டது

(B) ரமேஷ் என்பவரின் சாட்சியம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 122–ன் கீழ் பாதுகாக்கப்படவில்லை

(C) இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 122–ன் கீழான பாதுகாப்பை ரமேஷ் விட்டுக் கொடுத்துவிட்டார். ஆகவே அவரது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளலாம்

(D) நீதிமன்றத்தின் அனுமதியை பெற்ற பின்னரே ரமேஷ் சாட்சியம் அளிக்க இயலும்

21. Which of the following is not a substantive piece of evidence?

(A) Expert evidence
(B) Test Identification Parade
(C) Inquest report
(D) All of the above

கீழ்கண்டவற்றில் எது உறுதியான சாட்சியம் இல்லை?

(A) நிபுணரின் சாட்சியம்
(B) அடையாள அணிவகுப்பு
(C) பிரேத விசாரணை அறிக்கை
(D) மேலே கண்ட அனைத்தும்

22. Which of the following is false about a private document?

(A) All the documents other than public documents are private documents

(B) A private document is prepared by a person for his private interest under private right

(C) Private document is in the custody of the person to whom it belongs and is not available for general inspection to public

(D) As a general rule, the Court is bound to presume the genuineness of a private document from the duly certified secondary copy

தனியார் ஆவணம் குறித்து கீழ்கண்டவற்றில் எது தவறானது?

(A) பொது ஆவணங்கள் அல்லாத மற்ற அனைத்து ஆவணங்களும் தனியார் ஆவணங்கள் ஆகும்

(B) தனியார் உரிமையின் கீழ் ஒரு நபரின் தனிப்பட்ட நலனுக்காக ஒரு நபரால் தயார் செய்யப்படும் ஆவணம்

(C) தனியார் ஆவணம் என்பது அது யாருக்கு பாத்தியப்பட்டதோ அந்த நபரின் உடைமையில் இருப்பது அது பொதுமக்களின் ஆய்வுக்கு கிடைக்கத்தக்கதில்லை

(D) பொதுவாக முறையாக சான்றிடப்பட்ட இரண்டாம் நகலிலிருந்து ஒரு தனியார் ஆவணத்தின் உண்மை தன்மை குறித்து அனுமானித்துக் கொள்ள நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது

23. Who among the following are police officers within the meaning of section 25 of the Indian Evidence Act?

(A) Forest Ranger who is authorized to file complaints under the Wild Life Protection Act

(B) Customs Officers

(C) Central Excise Officers

(D) None of the above

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 25 ன் படி கீழ்கண்டவர்களில் யார் காவல் அலுவலர்?

(A) வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் புகார்களை தாக்கல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள வனப்பாதுகாவலர்

(B) சுங்கத்துறை அலுவலர்கள்

(C) மத்திய காவல்துறை அலுவலர்

(D) மேலே கண்ட எதுவும் இல்லை

24. Which among the following statements is not true?

(A) An admission by a party in a plaint signed and verified by him may be used as evidence against him in other suits

(B) A person making an admission in a pleading cannot take advantage of it

(C) An admission made by a person in a proceeding to which another was not a party, such admission is not admissible against the other in a subsequent suit in which both are co defendants

(D) None of the above

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியல்ல?

(A) வாதியால் கையொப்பமிடப்பட்டு சரிபார்க்கப்பட்ட பிராதில் உள்ள ஒப்புதல் உரையை வேறு வழக்குகளில் அவருக்கெதிராக பயன்படுத்தலாம்

(B) ஒரு வாதுரையில் ஒரு ஒப்புதலுரையை கொடுத்த ஒரு நபர் அதை தனக்கு சாதகமாக எடுத்துக் கொள்ள முடியாது

(C) ஒரு நடவடிக்கையில் ஒரு நபரால் ஒரு ஒப்புதலுரை கொடுக்கப்பட்டுள்ளது. அதில் மற்றொரு நபர் தரப்பினர் இல்லை. அத்தகைய ஒப்புதலுரையை அவ்விரு நபர்களும் பிரதிவாதிகளாக உள்ள வேறொரு வழக்கில் அந்த மற்றொரு நபருக்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியாது

(D) மேலே கண்ட எதுவும் இல்லை



Adda247

25. 'A', 'B' and 'C' meet at a coffee shop to discuss the enmity they had against 'D'. 'A' in particular leads the discussion by venting out his grievances against 'D' to which 'B' and 'C' nodded in agreement. They agree to murder 'D' by mixing poison in 'D''s coffee. The trio meet F and informs him of the plan, who willingly procures the poison for them. F is guilty of the offence of

(A) Conspiracy

(B) Instigation

(C) Abetment by conspiracy

(D) Intentional Aiding

D க்கு எதிராக உள்ள விரோதத்தை பற்றி ஆலோசனை செய்ய A, B மற்றும் C ஒரு காபி கடையில் சந்திக்கிறார்கள். D க்கு எதிராக தனக்கு உள்ள குறைகளை குறிப்பாக A விவரித்து ஆலோசனைக் கூட்டத்தை தலைமையேற்று நடத்துகிறார் A விவரிப்பதை B மற்றும் C ஒத்திசைவுடன் சம்மதிக்கிறார்கள் D க்கு காபியில் விஷம் கலந்து அவரை கொலை செய்ய அவர்கள் சம்மதிக்கிறார்கள். மூவரும் 'F'. ஐ சந்தித்து தங்களது திட்டத்தை கூறுகிறார்கள். அவர்களுக்கான F ம் விஷத்தை வாங்கி வருகிறார். F என்பவர் கீழ்கண்டவற்றில் எந்த குற்றத்திற்குள்ளாவார்?

(A) சதி

(B) தூண்டுதல்

(C) சதி செய்து உடந்தையாயிருத்தல்

(D) வேண்டுமென்றே உதவி செய்தல்

26. 'X', a doctor informs his patient 'Y' that he has cancer which is in its last stage. 'X' requests 'Y' to arrange his family affairs as he cannot survive for more than a couple of weeks 'Y' dies because of shock on hearing this, 'X' is:

(A) Guilty of murder as he knew that such a disclosure will cause death.

(B) Not guilty of any offence under IPC

(C) Guilty of causing death by negligence

(D) Guilty of culpable homicide not amounting to murder as he knew that such a disclosure is likely to cause death.

X என்ற மருத்துவர் அவருடைய நோயாளியான Y யிடம் அவருக்கு புற்று நோய் இருப்பதாகவும் அது கடைசி கட்டத்தில் இருப்பதாகவும் கூறுகிறார். Y சில வாரங்களுக்கு மேல் உயிர் வாழமாட்டார் என்றபடியால் குடும்ப நடவடிக்கைகள் குறித்து ஒரு ஏற்பாடு செய்யும்படியும் X, Y யிடம் கேட்டுக் கொள்கிறார் இதைக் கேட்ட அதிர்ச்சியில் Y இறக்கிறார், X என்பவர்

(A) அவ்விதம் தெரிவித்தல் மரணத்தை உண்டாக்கும் என்று அறிந்திருந்ததால், கொலைக் குற்றத்திற்குள்ளாவார்

(B) இந்திய தண்டணைச் சட்டத்தின் கீழ் எந்த குற்றத்திற்கும் உள்ளாகமாட்டார்

(C) கவனக்குறைவால் மரணத்தை உண்டாக்கும் குற்றத்திற்குள்ளாவார்

(D) அவ்விதம் தெரிவித்தல் மரணத்தை உண்டாக்கும் என்று அறிந்திருந்ததால், கொலைக் குற்றம் அல்லாத மரணத்தை உண்டாக்கும் குற்றத்திற்குள்ளாவார்

Adda247

27. A servant collected money from the debtor of his master as authorized by him. The servant retained the money because it was due to him as wages. He commits:

(A) Criminal breach of trust

(B) Theft

(C) No offence

(D) Criminal misappropriation

ஒரு வேலையாள் அவருடைய முதல்வர் அதிகாரம் அளித்தபடி அவரின் முதல்வருக்கு வரவேண்டிய கடன் தொகையை வசூலித்தார். அவருக்கு சம்பள பாக்கி இருப்பதால், வேலையாள் வசூலித்த பணத்தை தானே வைத்துக் கொண்டார். அவர் கீழ்கண்ட எந்த குற்றத்தை புரிந்தவராகிறார்?

(A) குற்ற நம்பிக்கை மோசடி

(B) திருட்டு

(C) குற்றம் எதுவும் இல்லை

(D) குற்றமுறு கையாடல்

28. 'X' has consensual sexual relations with 'Z's wife. She gives to 'X' a valuable property which 'X' knows to belong to her husband 'Z' and she has no authority from 'Z' to give. 'X' takes the property. Which one of the following offences has been committed by 'X'?

(A) Criminal breach of trust

(B) Theft and criminal breach of trust

(C) Theft

(D) Criminal Misappropriation

Z ன் மனைவியுடன் ஒப்புதலின்பேரில் X உறவு வைத்துக் கொள்கிறார். Z க்கு சொந்தமான விலை மதிக்கத்தக்க ஒரு பொருளை அவரின் மனைவி X க்கு கொடுக்கிறார். அது X க்கும் தெரியும். அதைக் கொடுக்க அவருக்கு Z அதிகாரம் கொடுக்கவில்லை. X அந்த பொருளை எடுத்துக் கொள்கிறார். கீழ்கண்டவற்றில் எந்த குற்றத்தை X புரிந்தவர் ஆவார்?

(A) குற்ற நம்பிக்கை மோசடி

(B) திருட்டு மற்றும் குற்ற நம்பிக்கை மோசடி

(C) திருட்டு

(D) குற்றமுறு கையாடல்

29. Common intention implies:

(A) Similar intention

(B) Pre-arranged planning

(C) Presence of common knowledge

(D) Common design for common objects

"பொதுவான எண்ணம்" என்பது

(A) ஒரே மாதிரியான எண்ணம்

(B) முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட திட்டம்

(C) பொதுவான அறிவு இருப்பது

(D) பொது நோக்கத்திற்கான பொது திட்டம்



Adda247

30. Which of the following is true as regards section 410 of IPC.

Statement 1. Conviction of principal offender is a prerequisite to the conviction of the receiver of stolen property.

Statement 2. Where a property is stolen in foreign territory and brought to Indian territory, he cannot be convicted of theft in India, but can be convicted under section 410 of IPC.

Statement 3. Possession of property transferred by theft, robbery alone is designated as stolen property, however, property transferred by criminal misappropriation and breach of trust will not attract Section 410 of IPC.

(A) statements 1 and 3 are correct

(B) statements 1 ,2 and 3 are correct

(C) statements 1,2,3 are incorrect

(D) statement 2 alone is correct

இந்திய தண்டனை சட்டப் பிரிவு 410 குறித்த கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

Adda247

கூற்று 1. முதன்மை குற்றவாளி தண்டிக்கப்பட்டால் மட்டுமே திருட்டுப் பொருளை பெற்றவரை தண்டிக்கமுடியும்.

கூற்று 2. வெளிநாட்டில் ஒரு பொருள் திருடப்பட்டு அதை இந்தியாவுக்கு கொண்டு வந்தால், அவரை இந்தியாவில் திருட்டு குற்றத்திற்கு தண்டிக்க முடியாது. ஆனால் அவரை இ.த.ச பிரிவு 410ன் கீழ் தண்டிக்க முடியும்.

கூற்று 3. திருட்டு மற்றும் கொள்ளை மூலம் மட்டும் பெற்ற பொருளை களவாடப்பட்ட சொத்து என்று கூறலாம். குற்றமுறு கையாடல் மற்றும் நம்பிக்கை மோசடியின் அடிப்படையில் பெறப்பட்ட சொத்து இ.த.ச பிரிவு 410ன் கீழ் வராது.

(A) கூற்றுகள் 1 மற்றும் 3 சரி

(B) கூற்றுகள் 1, 2 மற்றும் 3 சரி

(C) கூற்றுகள் 1, 2 மற்றும் 3 சரியல்ல

(D) கூற்று 2 மட்டும் சரி

31. In a petition to set aside the exparte decree, the Court allowed the petition subject to payment of costs within 7 days of the order. Cost was not paid in time and the petition was dismissed. After a period of 30 days, the petitioner filed an application seeking time to extend the payment of cost. Which of the following statements is correct?

(A) the petition cannot be entertained by the Court as the court has become functus officio

(B) the petition can be entertained

(C) the petition can be entertained only along with application under Section 5 of the Limitation Act

(D) the period of 30 days provided in Section 148 of CPC is mandatory hence petition filed after 30 days is not maintainable

ஒரு தலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்யக் கோரும் மனுவை, நீதிமன்றம் உத்தரவு தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் செலவுத் தொகையை செலுத்துவதின் பேரில் அனுமதித்தது. செலவுத் தொகை உரிய காலத்தில் செலுத்தப்படாததால் மனு தள்ளுபடி செய்யப்பட்டது. 30 நாட்கள் முடிவடைந்த பின்னர், செலவுத் தொகை செலுத்துவதற்கான காலத்தை நீட்டிக்கும்படி மனுதாரர் ஒரு மனுவை தாக்கல் செய்தார். கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

(A) நீதிமன்றம்தன் அதிகாரத்தை இழந்துவிட்டதால் நீதிமன்றம் அந்த மனுவை ஏற்க முடியாது

(B) அம்மனுவை ஏற்றுக் கொள்ளலாம்

(C) காலவரையறைச் சட்டத்தின் பிரிவு 5ன் கீழான ஒரு மனுவுடன் சேர்த்து அம்மனுவை அனுமதிக்கலாம்

(D) உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 148ல் கொடுக்கப்பட்டுள்ள 30 நாட்கள் காலவரம்பு கட்டாயமான ஒன்று. ஆகவே 30 நாட்கள் கழித்து தாக்கல் செய்யப்பட்ட மனு நிலை நிற்கத்தக்கதில்லை

Adda247

32. Due to the Commercial Courts Act, Commercial Division and Commercial Appellate Division of High Courts (Amendment) Act, 2018, "Specified Value", in relation to a commercial dispute reduced/ substituted from one crore rupees to:

(A) Four lakh rupees

(B) Five lakh rupees

(C) Three lakh rupees

(D) Six lakh rupees

வணிக நீதிமன்றங்கள் சட்டம், உயர்நீதிமன்ற வணிக அமர்வு மற்றும் வணிக மேல்முறையீட்டு அமர்வு (திருத்த) சட்டம் 2018 படி, ஒரு கோடியிலிருந்து வணிகப் பிரச்சனையின் "குறித்த மதிப்பு" எவ்வளவு குறைக்கப்பட்டது?

(A) நான்கு இலட்சம் ரூபாய்

(B) ஐந்து இலட்சம் ரூபாய்

(C) மூன்று இலட்சம் ரூபாய்

(D) ஆறு இலட்சம் ரூபாய்

33. In a suit for partition, the plaintiff claims 1/3 share from defendants 1 and 2, Which among the following is correct:

Statement 1. a defendant can make a counter claim in a partition suit.

Statement 2. a defendant can make a counter claim against another defendant

Statement 3. the defendant making counter claim can file an application to implead parties in the suit

Statement 4. the plaintiff being dominus litus can alone maintain a petition to implead parties

(A) all the four statements are correct

(B) statements 1 to 3 are correct

(C) statements 1 and 2 are correct

(D) statement 1 alone is correct

ஒரு பாக வழக்கில், 1 மற்றும் 2 பிரதிவாதிகளிடமிருந்து தனக்குரிய 1/3 பங்கை வாதி கோருகிறார். பாக வழக்கில் கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

கூற்று 1. பாக வழக்கில் ஒரு பிரதிவாதி எதிர் கோரிக்கையை கோரலாம்

கூற்று 2. ஒரு பிரதிவாதி மற்றொரு பிரதிவாதிக்கெதிராக எதிர்கோரிக்கையை கோரலாம்

கூற்று 3. எதிர் கோரிக்கை கோரும் பிரதிவாதி பிரதான வழக்கில் தரப்பினரை சேர்க்க மனு தாக்கல் செய்யலாம்

கூற்று 4. வழக்கை தாக்கல் செய்தவர் என்ற முறையில் வாதி மட்டுமே தரப்பினரை சேர்க்க மனு தாக்கல் செய்ய முடியும்.

(A) நான்கு கூற்றுகளும் சரி

(B) கூற்றுகள் 1 முதல் 3 சரி

(C) கூற்றுகள் 1 மற்றும் 2 சரி

(D) கூற்று 1 மட்டும் சரி



Adda247

34. A suit was decreed ex parte by the Sub Court, Tiruppatur. The subject matter of the suit now falls within the territorial jurisdiction of the Sub- Court, Vaniyampadi after its constitution. The defendant files a petition under Order 9 Rule 13 of C.P.C in Sub Court, Vaniyampadi. Which of the following provision confers jurisdiction on Vaniyampadi court to entertain the application.

(A) Section 37 of CPC
(B) Section 141 of CPC
(C) Section 150 of CPC
(D) Section 24 of CPC

திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தால் ஒரு வழக்கில் ஒரு தலைபட்ச தீர்ப்பாணை பிறப்புவிக்கப்பட்டது. தற்போது வழக்கு சொத்து புதியதாக ஆரம்பிக்கப்பட்ட வாணியம்பாடி சார்பு நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகிறது. வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் பிரதிவாதி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை IX விதி 13ன் கீழ் ஒரு மனுவை தாக்கல் செய்கிறார். அம்மனுவை ஏற்றுக்கொள்ள கீழ்கண்ட பிரிவுகளில் எந்த பிரிவு வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது?

(A) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 37
(B) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 141
(C) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 150
(D) உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 24

35. A and B are brothers. B resides in the joint family property. A files a suit for partition against B. Which of the following statements is correct.

(A) A can claim mesne profits from the date of suit
(B) A can claim mesne profits even for the period prior to suit
(C) A cannot claim mesne profits
(D) Only after preliminary decree is passed, mesne profits can be claimed

A மற்றும் B சகோதரர்கள். கூட்டு குடும்ப சொத்தில் B குடியிருக்கிறார். பாகப்பிரிவினை பரிகாரம் கோரி A, B க்கு எதிராக ஒரு வழக்கை தாக்கல் செய்கிறார். கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) வழக்கு தேதியிலிருந்து A இடைக்கால ஆதாயத்தை கேட்க முடியும்
(B) வழக்குக்கு முந்தைய காலத்திலிருந்தே A இடைக்கால ஆதாயத்தை கேட்க முடியும்
(C) A இடைக்கால ஆதாயத்தை கேட்க முடியாது
(D) முதல்நிலை தீர்ப்பாணை பிறப்புவித்த பின்னர் மட்டுமே இடைக்கால ஆதாயத்தை கேட்கலாம்

36. When the accused is aggrieved by the report of Clinical Psychologist as to his unsoundness of mind, he may prefer an appeal to

(A) Family Court

(B) Juvenile Justice Board

(C) Magistrate hearing the case

(D) Medical Board

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அவருக்குரிய புத்தி சுவாதீனம் குறித்த மனநல மருத்துவர் கொடுத்த அறிக்கையால் அவர் பாதிக்கப்பட்டிருந்தால், கீழ்கண்டவற்றில் எங்கே மேல்முறையீடு செய்யலாம்?

(A) குடும்ப நல நீதிமன்றம்

(B) இளஞ்சிறார் குழுமம்

(C) வழக்கை விசாரிக்கும் நீதித்துறை நடுவர்

(D) மருத்துவ குழு

37. The Supreme Court clarified that in case, there is connectivity problems due to geographical location or there is some other unavoidable difficulty, the time for uploading FIRs can be extended upto ———— hours.

(A) 12 (B) 72

(C) 48 (D) 24

உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியபடி பூகோள இருப்பிடத்தின் அடிப்படையில் இணையதளத்தில் பிரச்சனை இருந்தால் அல்லது வேறு ஏதேனும் தவிர்க்க முடியாத பிரச்சனை இருந்தால், இணையதளததில் முதல் தகவல் அறிக்கையை பதிவேற்றம் செய்ய எவ்வளவு மணி நேரம் நீடிக்கலாம்?

(A) 12 (B) 72

(C) 48 (D) 24

38. Statutory Bail is granted to an accused under Section 167 of CrPC. Which among the following statement is correct?

Statement 1: the prosecution can seek for cancellation of bail under Section 437 of CrPC only after filing final report in the above situation.

Statement 2: Court has powers to cancel bail only when it is granted under Section 437 of CrPC.

Statement 3: Question of Cancellation of bail will not arise when bail is granted under Section 167 of CrPC.

(A) Statements 1 to 3 are correct
(B) Statements 1 to 3 are incorrect
(C) Statement 1 alone is correct
(D) Statement 2 alone is correct

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 167ன் கீழ், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு சட்டப்படியான பிணை வழங்கப்பட்டுள்ளது. கீழ்கண்டவற்றில் எந்த கூற்று சரியானது?

கூற்று 1 : இறுதி அறிக்கையை தாக்கல் செய்த பின்னரே மேற்கூறிய சூழ்நிலையில் அரசு தரப்பில் பிணையை ரத்து செய்ய கு.வி.மு.ச. பிரிவு 437ன் கீழ் கோர முடியும்

கூற்று 2 : கு.வி.மு.ச. பிரிவு 437ன் கீழ் பிணை வழங்கப்பட்டால் மட்டுமே ஜாமீனை ரத்து செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

கூற்று 3 : கு.வி.மு.ச. பிரிவு 167 ன் கீழ் ஜாமீன் கொடுக்கப்பட்டிருக்கும்போது ஜாமீனை ரத்து செய்வது பற்றிய கேள்வியே எழாது.

(A) கூற்றுக்கள் 1 முதல் 3 சரி
(B) கூற்றுக்கள் 1 முதல் 3 சரியல்ல
(C) கூற்று 1 மட்டும் சரி
(D) கூற்று 2 மட்டும் சரி

Adda247

39. Four accused were named in an FIR. Charge sheet was filed against 3 accused only and the Committal Magistrate after due notice to the defacto complainant, took the charge sheet on file against 3 accused and committed the case to the Court of Sessions. The Sessions Court took the case on file against all the four accused.

1. The Sessions Court has no power to take cognizance under section 193 of Cr.P.C.
2. The Sessions Court can take cognizance against the 4th accused under section 319 of Cr.P.C. only
3. The Sessions Court should send the case back to the Judicial Magistrate for taking cognizance against the 4th accused and commit the case afresh.
4. The Sessions Court shall direct the Investigating Officer to file supplementary charge sheet against the 4th accused and take the same on file.

(A) all the 4 statements are correct

(B) all the 4 statements are incorrect

(C) only statement 2 is correct

(D) only statement 4 is correct

நான்கு நபர்களுக்கெதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இறுதி அறிக்கை மூன்று நபர்களுக்கெதிராக மட்டும் தாக்கல் செய்யப்பட்டது. நீதித்துறை நடுவர் புகார் கொடுத்தவருக்கு அறிவிப்பு கொடுத்த பின்னர் மூன்று நபர்களுக்கெதிராக கோப்புக்கு எடுத்து வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டார். அமர்வு நீதிமன்றம் வழக்கை நான்கு நபர்களுக்குகெதிராகவும் கோப்புக்கு எடுத்தது.

1. கு.வி.மு.ச பிரிவு 193ன் படி வழக்கை கோப்புக்கு எடுக்க அமர்வு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை
2. கு.வி.மு.ச பிரிவு 319ன் கீழ் மட்டுமே அமர்வு நீதிமன்றம் நான்காம் நபருக்கெதிராக வழக்கை கோப்புக்கு எடுக்க முடியும்.
3. நான்காம் நபருக்கெதிராக வழக்கை கோப்புக்கு எடுக்க அமர்வு நீதிமன்றம் வழக்கை நீதித்துறை நடுவருக்கே திரும்ப அனுப்ப வேண்டும். நீதித்துறை நடுவர் மீண்டும் வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.
4. அமர்வு நீதிமன்றம் நான்காம் நபருக்கெதிராக கூடுதல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யும்படி புலன்விசாரணை அதிகாரிக்கு உத்தரவிட்டு பின்னர் வழக்கை கோப்புக்கு எடுக்க வேண்டும்.

(A) மேற்கூறிய நான்கு கூற்றுக்களும் சரி

(B) மேற்கூறிய நான்கு கூற்றுக்களும் சரியல்ல

(C) கூற்று 2 மட்டும் சரி

(D) கூற்று 4 மட்டும் சரி

Adda247

40. In which of the following situations sanction is necessary for prosecution?

1. A Subordinate officer files a private complaint against her Superior officer for an offence under Section 354A of IPC.
2. An IPS officer files a private complaint against her superior officer for an offence under Section 376 of IPC
3. Government Doctor is accused of negligently performing a surgery.
4. Superintendent of Jail does not release accused even after bail bond is produced. Accused files private complaint under Section 342 of IPC.

(A) Situations 1 and 2 alone require sanction

(B) Situations 3 and 4 alone require sanction

(C) All four Situations require sanction

(D) Situations 2 and 4 alone require sanction

கீழ்கண்ட எந்த சூழ்நிலையில் வழக்கு தொடர முன் அனுமதி தேவை?

1. ஒரு கீழ்நிலை அலுவலர் அவரின் உயர் அதிகாரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 354 A ன் கீழான குற்றத்திற்கு தனிப்புகார் தாக்கல் செய்கிறார்.
2. ஒரு இ.கா.ப. அதிகாரி அவரின் உயர் அதிகாரிக்கெதிராக இ.த.ச. பிரிவு 376 ன் கீழான குற்றத்திற்கு ஒரு தனிப் புகாரை தாக்கல் செய்கிறார்.
3. அரசு மருத்துவர் ஒருவர் கவனக்குறைவாக அறுவை சிகிச்சை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவாராக இருக்கிறார்.
4. பிணையப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னரும், சிறைக் கண்காணிப்பாளர் குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்யவில்லை. ஆகவே குறைஞ்சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவு 342 ன் கீழ் தனிப் புகாரை தாக்கல் செய்கிறார்.

(A) 1 மற்றும் 2 சூழ்நிலைகளில் மட்டும் அனுமதி தேவை

(B) 3 மற்றும் 4 சூழ்நிலைகளில் மட்டும் அனுமதி தேவை

(C) மேற்கூறிய நான்கு சூழ்நிலைகளிலும் அனுமதி தேவை

(D) 2 மற்றும் 4 சூழ்நிலைகளில் மட்டும் அனுமதி தேவை

41. Illustration 1 : Offences under section 294(b) and 324 IPC took place on 1/1/2016. Complainant filed a complaint in respect of the said offences before the Magistrate and the same was referred to police under section 156(3) of Cr.P.C on 3/4/2016. The police filed final report on 10/10/2019.

Illustration 2 : Offences under section 294(b) and 324 IPC took place on 1/1/2016. Complaint filed immediately after the occurrence before the police on the same day. The police filed the final report on 10/10/2019.

(A) Cognizance can be taken in illustration 1 only

(B) Cognizance can be taken in illustration 2 only

(C) Cognizance cannot be taken in both the cases

(D) Cognizance can be taken in both cases

உதாரணம் 1 : இ.த.ச பிரிவுகள் 294 (b) மற்றும் 324 ன் கீழான குற்றம் 1.1.2016 ல் நடந்தது. அந்த குற்றங்களுக்கு புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட புகாரை நீதித்துறை நடுவர் கு.வி.மு.ச பிரிவு 156(3) ன் கீழ் காவல்துறைக்கு 3.4.2016 அன்று அனுப்பினார். காவல் துறை 10.10.2019 அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது.

உதாரணம் 2 : இ.த.ச. பிரிவு 294 (b) மற்றும் 324 ன் கீழான குற்றம் 1.1.2016ல் நிகழ்ந்தது. அதே நாளில் புகார்தாரர் காவல்துறையிடம் உடனடியாக புகார் கொடுத்தார். காவல்துறை 10.10.2019 அன்று குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது.

(A) உதாரணம் 1 ல் கண்ட சூழ்நிலையில் மட்டுமே வழக்கை கோப்புக்கு எடுக்க முடியும்

(B) உதாரணம் 2 ல் கண்ட சூழ்நிலையில் மட்டுமே வழக்கை கோப்புக்கு எடுக்க முடியும்

(C) மேற்கூறிய இரண்டு உதாரணங்களில் உள்ள சூழ்நிலைகளிலும் வழக்கை கோப்புக்கு எடுக்க முடியாது

(D) மேற்கூறிய இரண்டு உதாரணங்களில் உள்ள சூழ்நிலைகளிலும் வழக்கை கோப்புக்கு எடுக்கமுடியும்

Adda247

42. To assess the competence of a two-and-a-half year old child victim of a rape, before recording her statement under Section 164, Cr.P.C., which among the following questions would be appropriate to test the child's capacity to understand and depose?

1. "What does it mean to tell the truth" and "What does it mean to tell a lie?
2. What is the difference between the truth and a lie?
3. If I tell your mom that you just yelled at me, would that be truth or a lie?
4. If you tell your mom that I hit you, would that be truth or a lie?

(A) Questions 1 and 2
(B) Questions 1 to 4
(C) Questions 3 and 4
(D) Questions 1 and 4

கற்பழிப்பில் பாதிக்கப்பட்ட இரண்டரை வயது குழந்தையின் வாக்கு மூலத்தை கு.வி.மு.ச. பிரிவு 164 ன் கீழ் பதிவு செய்வதற்கு முன்னர், அக்குழந்தையின் தகுதியுடமை குறித்து மதிப்பிடும் போது, கீழ்கண்ட வினாக்களில் எது குழந்தையின் புரிதல் மற்றும் சாட்சியம் கொடுக்கும் தகுதியை பற்றி சோதனை செய்வதற்கு உரிய வினாவாக இருக்கும்?

1. உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் என்ன அர்த்தம் மற்றும் "பொய் சொல்வதென்றால் என்ன அர்த்தம்"?
2. உண்மைக்கும் ஒரு பொய்யுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?
3. என்னைப் பார்த்து நீ திட்டினாய் என்று நான் உன் அம்மாவிடம் சொன்னால், அது உண்மையா அல்லது பொய்யா?
4. நான் உன்னை அடித்ததாக நீ உன் அம்மாவிடம் சொன்னால், அது உண்மையா அல்லது பொய்யா?

(A) கேள்விகள் 1 மற்றும் 2
(B) கேள்விகள் 1 முதல் 4 வரை
(C) கேள்விகள் 3 மற்றும் 4
(D) கேள்விகள் 1 மற்றும் 4

43. Y, a famous Hollywood celebrity, has won huge amount of damages for defamation against a well known newspaper. When questioned by the reporters on the impact of awarding such huge damages on the Freedom of Speech and Expression and whether such huge damages justify the injury and compensation. Y replied that the damages should not only be seen as a compensation, economic loss etc but as an example to others that reputation of a person is invaluable and should not be tampered with. This kind of damage being referred by Y are known as

(A) Nominal damages
(B) Exemplary damages
(C) Contemptuous damages
(D) Real damages

Y என்ற ஹாலிவுட்டில் புகழ்பெற்ற ஒருவர் பெரும் நஷ்ட ஈட்டுத் தொகையை தனக்கெதிரான அவதூறுக்காக ஒரு புகழ் பெற்ற செய்தித்தாளுக்கு எதிராக வென்றிருக்கிறார். பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தின் மீது அதிக நஷ்ட ஈட்டு தொகை கொடுத்ததால் ஏற்பட்ட தாக்கம் குறித்தும் மற்றும் அந்த நஷ்டஈட்டுத் தொகை அவருக்கு இழைக்கப்பட்ட தீங்கு மற்றும் நஷ்டத்தை நியாயப்படுத்துமா என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு, நஷ்ட ஈட்டு தொகையை நஷ்டஈடாகவோ, பொருளாதார இழப்பாகவோ மட்டும் பார்க்கக்கூடாது என்றும் ஆனால் அது மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கிறது என்றும் ஒரு நபரின் மதிப்பு விலைமதிக்க முடியாதது என்றும் அதில் தலையிடக்கூடாது என்று Y பதில் அளித்தார். Y-ஆல் குறிப்பிடப்பட்ட நஷ்டம் எவ்வாறு அறியப்படுகிறது?

(A) இயல்பான நஷ்டம்
(B) உயரிய நஷ்டம்
(C) அவமதிப்பான நஷ்டம்
(D) உண்மையான நஷ்டம்

44. One night Ravi and Keshav were having heated argument in Ravi's office. Keshav left with angry slamming the office door violently behind him. The force of Keshav's action caused the door lock to jam and Ravi was unable to open the door to leave his office until a locksmith was able to come the next day. Ravi sued for wrongful confinement against Keshav.

(A) Keshav's act caused Ravi to be confined, hence it is wrongful confinement
(B) Keshav was negligent in slamming the door
(C) Ravi was in his own office, hence it is not wrongful confinement
(D) Keshav did not intend to jam the lock, hence it is not wrongful confinement

ரவி என்பவரின் அலுவலகத்தில் ஒரு நாள் இரவு ரவிக்கும், கேசவ் என்பவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. கேசவ் கோபமாக தனக்கு பின்புறத்திலிருந்து கதவை சடாரென மூடினார். அவ்விதம் வேகமாக மூடியதால் கதவின் பூட்டு அடைத்துக்கொண்டது. மறுநாள் பூட்டை சரிசெய்பவர் வரும் வரை ரவியால் கதவைத் திறந்து அலுவலகத்தை விட்டு வெளியே செல்ல முடியாமல் இருந்தார். தவறாக அடைத்து வைத்ததாக கூறி ரவி என்பவர் கேசவ் மீது வழக்கைத் தாக்கல் செய்தார்.

(A) கேசவ் என்பவரின் செயலால் ரவி அடைக்கப்பட்டார். ஆகவே அது தவறான அடைப்புதான்
(B) கேசவ் படாரென்று கதவை மூடுவதில் கவனக்குறைவாக இருந்தார்
(C) ரவி அவரது சொந்த அலுவலில்தான் இருந்தார். ஆகவே அது தவறான அடைப்பு ஆகாது
(D) பூட்டு அடைபட கேசவ் எண்ணியிருக்கவில்லை. ஆகவே அது தவறான அடைப்பு இல்லை

Adda247

45. In which of the following cases, the Supreme Court directed the compulsory registration of all marriages in India?

(A) Seema vs. Ashwini Kumar
(B) Daniel Lathif vs. Union of India
(C) Ashok Kumar vs. Union of India
(D) Saradha vs. Dharampal

கீழ்க்கண்டவற்றில் எந்த வழக்கில், உச்சநீதிமன்றம் இந்தியாவில் அனைத்து திருமணங்களும் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது?

(A) சீமா எதிர் அஸ்வினி குமார்
(B) டேனியல் லத்தீப் எதிர் யூனியன் ஆப் இந்தியா
(C) அசோக்குமார் எதிர் யூனியன் ஆப் இந்தியா
(D) சாரதா எதிர் தரம்பால்

46. The total forest cover in our country is far less than the ideal minimum of 1/3 of the total land. Therefore, the Parliament by 42[nd] Amendment to the Constitution has added two more Articles to ensure improvement of environment and impose duty on every citizen. They are

(A) Art 31 C and 51 A (a)
(B) Art 48 A and 51 A (g)
(C) Art 39 A and 51 A (b)
(D) Art 31 D and 51 A (d)

இந்திய வனப்பகுதியின் பரப்பளவு ஏறத்தாழ இந்திய பரப்பளவில் 1/3 பங்கை விட மிகக்குறைவு ஆகும். ஆகவே 42-வது திருத்தம் மூலம் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதை உறுதி செய்யவும் மற்றும் ஒவ்வொரு குடிமகன் மீது ஒரு கடமையை சுமத்தியும் பாராளுமன்றம் மேலும் இரண்டு ஷரத்துக்களை இந்திய அரசியல் அமைப்பில் சேர்த்தது. அவை

(A) ஷரத்து 31 C மற்றும் 51 A (a)
(B) ஷரத்து 48 A மற்றும் 51 A (g)
(C) ஷரத்து 39 A மற்றும் 51 A (b)
(D) ஷரத்து 31 D மற்றும் 51 A (d)

47. The Law Commission of India in its 259[th] Report suggested including a new Fundamental Right in the Constitution. Identify it from the following


(A) Right to childhood care
(B) Right to reject a candidate in elections
(C) Right to Privacy
(D) Right to be Forgotten

இந்திய அரசியலமைப்பில் புதிய அடிப்படை உரிமையை இந்திய சட்ட ஆணையம் தனது 259-வது அறிக்கையில் பரிந்துரை செய்தது. கீழ்க்கண்டவற்றிலிருந்து அதை தேர்வு செய்க.





(A) குழந்தைகளின் பராமரிப்பு நலனுக்கான உரிமை
(B) தேர்தலில் ஒரு வேட்பாளரை நிராகரிக்கும் உரிமை
(C) தனிமையில் இருப்பதற்கான உரிமை
(D) மறப்பதற்கான உரிமை




Adda247





48. 

When the above is folded to form a cube, which one of the following can be produced?

(A)  (B)  (C)  (D) 



மேலே உள்ளவற்றை ஒரு கூம்பை உருவாக்க மடித்தால், கீழ்க்கண்டவற்றில் எதை உருவாக்க முடியும்?

(A)  (B)  (C)  (D) 

Adda247

49. Identify the missing number from the suggested answers:

| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 6 | ? | 18 |

(A) 8
(B) 9
(C) 10
(D) 11

கொடுக்கப்பட்ட பதில்களிலிருந்து விடுபட்ட எண்ணை கண்டறியவும்.

| | | |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 6 | ? | 18 |

(A) 8
(B) 9
(C) 10
(D) 11

50. Which one of the following statements is not correct?

(A) Under Article 16 of the Constitution, the guarantee against discrimination is limited to 'employment' and 'appointment' under the State

(B) Article 15 of the Constitution deals with all cases of discrimination which do not fall under Article 16 of the Constitution

(C) Article 16 of the Constitution embodies the particular application of general rule of equality laid down in Article 14 of the Constitution with special reference for appointment and employment under the State

(D) Article 16 of the Constitution does not guarantee equality of opportunity in matters of appointment

கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது சரியல்ல?

(A) அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 16ன் கீழ், பாரபட்சத்திற்கு எதிரான உத்ரவாதம், அரசின் கீழ் "வேலை" மற்றும் "பணி நியமனம்" ஆகியவற்றுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது

(B) அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 16ன் கீழ், வராத அனைத்து பாரபட்சங்களைப் பற்றி ஷரத்து 15 கூறுகிறது

(C) அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 16ன் ஆனது ஷரத்து 14ன் கீழான சமத்துவ உரிமை அரசின் கீழ் உள்ள "வேலை" மற்றும் "பணி நியமனம்" ஆகியவற்றுக்கு பொருந்தும் என்பதை உள்ளடக்கியிருக்கிறது

(D) பணி நியமனத்தில் சமவாய்ப்புக்கான உத்ரவாதத்தை அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 16 கொடுக்கவில்லை

Adda247

51. Article 14 of the Constitution permits classification but prohibits

(A) group law
(B) class legislation
(C) religious classification
(D) single person law

அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 14 வகைபாடுகளை அனுமதிக்கிறது. ஆனால் கீழ்க்கண்டவற்றில் எதை தடை செய்கிறது.

(A) சட்டங்களை தொகுத்தல்
(B) வர்க்க சட்டம்
(C) மத வகைபாடு
(D) தனிநபர் சட்டம்

52. The admission rules of an Engineering College provides that no capitation fee shall be charged from the residents of the XYZ State but the non-residents shall be required to pay capitation fee. Answer in reference to Article 15 (1) of the Constitution?

(A) Article 15 (1) prohibits discrimination between citizens on the ground only of religion, race, caste, sex, place of birth or any of them.

(B) Article 15 (1) prohibits discrimination on the basis of place of birth which impliedly includes place of residence.

(C) Article 15 (1) prohibits discrimination between citizens on the ground only of religion, race, caste, sex, place of birth and the provision suffers from '*causus omissus*' and "place of residence" is inadvertently omitted.

(D) Article 15 (1) does not prohibit discrimination based on the place of residence.

XYZ மாநிலத்தில் குடியிருப்பவர்களிடமிருந்து கேபிடேசன் கட்டணத்தை வசூலிக்கக்கூடாது என்பது பொறியியல் கல்லூரியில் சேர்க்கைக்கான விதிகள் கூறுகிறது. ஆனால் மற்ற மாநிலத்தார்களிடம் கேபிடேசன் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று கூறுகிறது. அரசியலமைப்புச் சட்ட ஷரத்து 15 (1)ன் கீழ் பதில் அளிக்கவும்.

(A) ஷரத்து 15 (1) ஆனது மதம், இனம், ஜாதி, பாலினம், பிறப்பிடம் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்று ஆகியவற்றின் அடிப்படையில் குடிமக்களுக்கிடையே உள்ள பாரபட்சத்தை தடை செய்கிறது

(B) வசிப்பிடத்தை உட்கிடையாக உள்ளடக்கிய பிறப்பிடத்தின் அடிப்படையிலான பாரபட்சத்தை ஷரத்து 15 (1) தடை செய்கிறது

(C) மதம், இனம், ஜாதி, பாலினம், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாரபட்சத்தை மட்டும் ஷரத்து 15 (1) தடை செய்கிறது மற்றும் அந்த விதிகள் பொது சட்டத்தால் பாதிக்கப்படுகிறது மற்றும் வசிப்பிடம் தவறுதலாக குறிப்பிடப்படாமல் விடப்பட்டுள்ளது

(D) வசிப்பிடத்தின் அடிப்படையிலான பாரபட்சத்தை ஷரத்து 15 (1) தடை செய்யவில்லை

53. Choose the correct statement from the options given below :

Statement I : Article 22 of the Constitution of India provides rights of the accused to safeguard himself from the misuse of power by administration.

Statement II : Article 22 of the Constitution of India provides rights to the non-citizens only.

Statement III : $35^{th}$ Amendment to Indian Constitution, has introduced safeguards to prevent misuse of power in preventive detention.

Options :

(A) Statement I is incorrect, but statements II and III are correct.

(B) Statement II is incorrect, but statements I and III are correct.

(C) Statement III is incorrect, but statements I and II are correct.

(D) Statement I is correct, but statements II and III are incorrect.

கீழ்க்கண்டவற்றில் சரியான கூற்றை தேர்வு செய்க :

கூற்று I : அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 22 நிர்வாகத்தால் அதிகாரம் தவறாக பயன்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமையை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளிக்கிறது.

கூற்று II : அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 22 இந்திய குடிமக்கள் அல்லாத வேறு குடிமக்களுக்கு உரிமை அளிக்கிறது.

கூற்று III : தடுப்புக் காவலில் வைப்பதற்கான அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதை தடுக்க அரசியலமைப்பு சட்டத்தில் 35வது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

(A) கூற்று I சரியல்ல. ஆனால் கூற்று II மற்றும் III சரியானது

(B) கூற்று II சரியல்ல. ஆனால் கூற்று I மற்றும் III சரியானது

(C) கூற்று III சரியல்ல. ஆனால் கூற்று I மற்றும் II சரியானது

(D) கூற்று II மற்றும் III சரியல்ல. ஆனால் கூற்று I சரியானது

Adda247

54. Which of the following statements with respect to Right to Know is/are correct?

I. Right to know the affairs of the Government can be traced to Article 19 of the Constitution of India.

II. In Dinesh Trivedi v. Union of India, 1977 (14) SCC 306, it was held that the citizens have absolute right to know about the affairs of the government.

(A) I only
(B) II only
(C) Both I and II
(D) None of the above

அறிவதற்கான உரிமை சம்பந்தமாக கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

கூற்று I : அரசின் நடவடிக்கைகளை அறிவதற்கான உரிமையை அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 19லிருந்து கண்டறிய முடியும்

கூற்று II : தினேஷ் திரிவேதி எதிர். யூனியன் ஆப் இந்தியா 1977 (14) எஸ்சிசி 306 என்ற வழக்கில், அரசின் நடவடிக்கைகளை அறிவதற்கான முழு உரிமை குடிமக்களுக்கு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) I மட்டும்
(B) II மட்டும்
(C) I மற்றும் II
(D) மேலே கண்ட எதுவும் இல்லை

55. Consider the following statements :

The High Court has jurisdiction to:

I. punish itself for its contempt.

II. tender advice on the legal question referred to it.

III. tender advice on the legal question referred to it by the Governor of State upon advice of President of India.

IV. issue certain writs for the enforcement of Fundamental Rights or for other purposes.

Which of the statements given above is correct :

(A) I and IV
(B) I and II
(C) I, II and III
(D) II, III and IV

கீழே கண்ட கூற்றுக்களை கவனிக்கவும் :

உயர்நீதிமன்றத்திற்கு :

கூற்று I : நீதிமன்ற அவமதிப்புக்கு உயர்நீதிமன்றத்திற்கு தண்டனை அளிக்க அதிகாரம் இருக்கிறது

கூற்று II : உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு ஆலோசனை வழங்க அதிகாரம் இருக்கிறது

கூற்று III : குடியரசுத் தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் ஆளுநரால் அனுப்பப்பட்ட சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு ஆலோசனை வழங்க அதிகாரம் இருக்கிறது.

கூற்று IV : அடிப்படை உரிமைகளை செயல்படுத்துவதற்காகவும், மற்ற நோக்கங்களுக்காகவும் குறிப்பிட்ட நீதிப்பேராணைகளை பிறப்புவிக்க அதிகாரம் இருக்கிறது.

மேலே கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

(A) I மற்றும் IV
(B) I மற்றும் II
(C) I, II மற்றும் III
(D) II, III மற்றும் IV

Adda247

56. In case of a sub-agent lawfully appointed, which of the following is correct?

(A) As regards third parties, the sub-agent can neither bind the principal nor the original agent

(B) As regards third parties, the sub-agent can bind only the original agent

(C) As regards third parties, the sub-agent binds the principal as an original agent can bind

(D) As regards third parties, the sub-agent cannot bind the principal as an original agent

சட்டப்பூர்வமாக நியமிக்கப்பட்ட துணை முகவர் சம்பந்தமாக, கீழ்கண்டவற்றில் எது சரியானது?

(A) மூன்றாம் தரப்பினரை பொறுத்தவரை, துணை முகவர் முதல்வரையோ அல்லது அசல் முகவரையோ கட்டுப்படுத்த முடியாது

(B) மூன்றாம் தரப்பினரை பொறுத்தவரை, துணை முகவர் அசல் முகவரை மட்டும் கட்டுப்படுத்த முடியும்

(C) மூன்றாம் தரப்பினரை பொறுத்தவரையில், துணை முகவர் முதல்வரை அசல் முகவர் கட்டுப்படுத்துவது போல கட்டுப்படுத்தலாம்

(D) மூன்றாம் தரப்பினரை பொறுத்தவரையில், துணை முகவர் அசல் முகவரைப் போல் முதல்வரை கட்டுப்படுத்த முடியாது

57. Which of the following statements is not correct?

(A) When the acceptance is required by post, but the same is made by telephone or email it is a valid contract.

(B) If the deviation from the prescribed manner is to the disadvantage of the offeror, he is entitled to treat the acceptance as invalid.

(C) If the offeror wants the acceptance to be sent by wagon, but the same is sent by post, and the letter reaches after the arrival of the wagon, the offeror is entitled to treat the acceptance as invalid.

(D) The communication of the acceptance is complete as against the proposer, when it comes to the knowledge of the acceptor.

கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது இல்லை?

(A) ஏற்பை தபால் மூலம் தெரியப்படுத்த வேண்டும் என்ற நிலையில், ஏற்பை தொலைபேசி மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பினால் கூட அது ஒரு செல்லுபடியாகும் ஒப்பந்தம் ஆகும்

(B) குறிப்பிடப்பட்ட முறையில் தெரிவிக்கப்படாத ஏற்பு, முனைவருக்கு சாதகமற்று இருந்தால், முனைவர் ஏற்பை செல்லாது என்று கோரலாம்

(C) ஏற்பை வாகனம் மூலம் அனுப்ப வேண்டும் என்று முனைவர் விரும்புகிறார். ஆனால் ஏற்பு தபாலில் அனுப்பப்படுகிறது ஆனால் கடிதம் வாகனம் வந்த பின்னர் தான் கடிதம் வந்து சேர்கிறது. முனைவர் அத்தகைய ஏற்பை செல்லாது என்று கூறலாம்

(D) ஏற்பை அறிவித்தல், அத்தகை அறிவித்தல் முனைவருக்கு தெரியவரும்போது, முனைவருக்கு எதிராக முழுமையடைகிறது

58. The juristic concept of the contract consists of:

(A) Free consent and capacity

(B) Offer and acceptance

(C) Consideration and undue influence

(D) Agreement and obligation

ஒரு ஒப்பந்தத்தின் சட்டப்பூர்வ கருத்துரை என்பது கீழ்கண்டவற்றில் எதை உள்ளடக்கி இருக்கும்?

(A) முழு இசைவு மற்றும் தகுதி

(B) முனைவு மற்றும் ஏற்பு

(C) மறுபயன் மற்றும் தகாத செல்வாக்கு

(D) உடன்பாடு மற்றும் கடமை

59. The latest theory of contract is:

(A) Will theory

(B) Theory of enforceability

(C) Purpose theory

(D) Fides Ficta

ஒரு ஒப்பந்தத்தின் சமீபத்திய கோட்பாடு என்பது

(A) விருப்ப கோட்பாடு

(B) நிறைவேற்றுதல் கோட்பாடு

(C) நோக்கம் என்ற கோட்பாடு

(D) பிடெஸ் பிக்டா கோட்பாடு

60. To sell a thing by the finder under Section 169 of Indian Contract Act, when the owner refuse to pay the lawful charges upon demand, what is the lawful charge of the finder?

(A) One fourth of its value

(B) Half of its value

(C) One third of its value

(D) Two third of its value

ஒரு பொருளின் உரிமையாளர் அதை கண்டெடுத்தவருக்குரிய சட்டப்பூர்வமான தொகையை கேட்பின் பேரில் கொடுக்க தவறினால், அப்பொருளை ஒப்பந்த சட்டப் பிரிவு 169ன் படி விற்க கண்டெடுத்தவரின் சட்டபூர்வ கட்டணம் எவ்வளவு?

(A) அதன் மதிப்பின் நான்கில் ஒரு பாகம்

(B) அதன் மதிப்பின் பாதிப்பாகம்

(C) அதன் மதிப்பின் மூன்றில் ஒரு பாகம்

(D) அதன் மதிப்பின் மூன்றில் இரண்டு பாகம்

61. A took his wife B to England for vacations. Due to some business emergency A had to go back to his place of work immediately while leaving B in England due to her ill health, A promised to pay B ₤ 300 (Pounds) per week as maintenance during her stay in England but failed to pay. If A is sued by B then:

(A) A is liable for breach of contract

(B) A is not liable because he cannot be presumed to have any intention to enter into a contract with his wife B

(C) A is not liable because of lack of consideration on the part of B

(D) A is liable because a promise to one's wife result in a binding contract even in the absence of a consideration for the promise

A என்பவர் தன்மனைவியான Bயை விடுமுறைக்காக இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார். தொழில் சம்பந்தமாக அவசர வேலை இருந்ததால் அவர் உடனடியாக அவர் வேலை செய்யும் இடத்துக்கு செல்ல வேண்டியிருந்தது. Bக்கு சுகவீனமாக இருந்ததால் அவரை விட்டுச் செல்ல நேர்ந்தது. B இங்கிலாந்தில் இருக்கும் வரை அவருக்கு வாரம் ஒன்றுக்கு ₤ 300 (பவுண்டை) பராமரிப்பு தொகையாக கொடுப்பதாக A ஒப்புக் கொண்டார். ஆனால் A தொகையை கொடுக்கவில்லை A ன் மீது B வழக்கு தொடர்ந்தால்.

(A) ஒப்பந்தத்தை மீறியதற்காக A பொறுப்பாவார்

(B) A அவர் மனைவியின் B யுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள எண்ணம் கொண்டார் என்று அனுமானிக்க முடியாது. ஆகவே பொறுப்பாக மாட்டார்

(C) B தரப்பில் மறுபயன் இல்லாததால் A பொறுப்பாக மாட்டார்

(D) உறுதிமொழிக்கு மறுபயன் இல்லாவிட்டாலும் கூட மனைவிக்கு கொடுக்கப்படும் ஒரு உறுதி மொழி கட்டுப்படுத்தும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கும். ஆகவே A பொறுப்பாவார்.

62. Match Column A with Column B and choose the correct option:

| | | | |
|---|---|---|---|
| (a) | Remoteness of damage | 1. | Adams v. Lindsey |
| (b) | Liability for fraud | 2. | Hadley v. Baxendale |
| (c) | Concept of unjust enrichment | 3. | Derry v. Peek |
| (d) | Communication of acceptance | 4. | Moses v. Macferlon |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

A மற்றும் B பிரிவை பொருத்தி சரியானவற்றை தேர்வு செய்க?

| | | | |
|---|---|---|---|
| (a) | நேரடி தொடர்பில்லாத சேதம் | 1. | ஆதம்ஸ் எதிர் லிண்ட்சே |
| (b) | ஏமாற்றுவதால் ஏற்படும் பொறுப்பு | 2. | ஹாட்லே எதிர் பாக்செண்டல் |
| (c) | நியாயமற்ற லாபம் | 3. | டெர்ரி எதிர் பீக் |
| (d) | ஏற்புடைமையை தெரிவித்தல் | 4. | மோசஸ் எதிர் மேக்பெர்லான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

Adda247

63. Suit under Section 8 of Specific Relief Act, 1963 is not maintainable

(A) Against the owner of the article claimed

(B) Against a person who has possession or control over the article

(C) In respect of an article for which compensation in money is not an adequate relief

(D) In cases where ascertainment of damages is extremely difficult

குறித்தவகை நிவாரணச்சட்டம் 1963, பிரிவு 8ன் கீழான ஒரு வழக்கு கீழே கண்டவற்றில் எதில் நிலைக்கத்தக்கதில்லை?

(A) கோரப்படும் பொருளின் உரிமையாளருக் கெதிராக

(B) அந்த பொருளின் உடைமையை கொண்டிருக்கும் அல்லது அதன்மீது கட்டுப்பாட்டை கொண்டிருக்கும் நபருக்கு எதிராக

(C) பணத்தின் மூலம் நஷ்ட ஈடு கொடுப்பது போதுமான பரிகாரமாக இல்லாத ஒரு பொருள் சம்பந்தமாக

(D) நஷ்ட ஈட்டை தீர்மானிப்பது மிகவும் கடினமாக இருக்கும் நிலையில்

64. X is the holder of a bill payable to "X or order." X by simple delivery transfers the bill without endorsing it to Y. In this case Y is:

(A) Only assignee of a choice in action and takes the bill subject to all defects

(B) Holder in due course

(C) Holder for value

(D) Illegal holder

X என்பவர் ஒரு மாற்றுச்சீட்டை பெற்றிருப்பவர். அது X அல்லது அவர் உத்தரவிடும் நபருக்கு பணம் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதில் எவ்வித மேற்குறிப்பும் செய்யாமல் மாற்றுச்சீட்டை Y என்பவரிடம் X கொடுத்துவிடுகிறார் Y என்பவர்

(A) மாற்றுச்சீட்டு ஒப்படைக்கப்பட்டவர் மட்டுமே ஆவர். அனைத்து குறைபாடுகளுக்கும் உட்பட்டே மாற்றுச்சீட்டை ஏற்றுக் கொண்டார்

(B) மாற்றுச்சீட்டை உரிய முறையில் வைத்திருப்பவர் ஆவர்

(C) மதிப்புக்காக வைத்திருப்பவர் ஆவார்

(D) சட்டவிரோதமாக வைத்திருப்பவர் ஆவார்

65. The mortgagor may deposit in to the court, the money due on mortgage, but -

(A) after the principal money has become due

(B) before a suit for redemption of the mortgage is barred

(C) on fulfillment of both the conditions mentioned above

(D) on fulfillment of any one of the above-mentioned conditions

அடமான நிலுவைத் தொகையை அடமானம் வைப்பவர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யலாம், ஆனால்

(A) அசல் தொகை தவணை ஆன பின்னர் தான் வைப்பீடு செய்ய முடியும்

(B) அடமானத்தை மீட்பதற்கான வழக்கு தடை செய்யப்படுவதற்கு முன்னர் வைப்பீடு செய்ய வேண்டும்

(C) மேற்கூறிய இரண்டு நிபந்தனைகள் நிறைவேறிய பின்னர் தான் வைப்பீடு செய்ய முடியும்

(D) மேற்கூறிய நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை நிறைவேற்றினாலும் வைப்பீடு செய்ய முடியும்

Adda247

66. To deal with cases, where same property or interest therein is transferred to different persons in such a manner that use or enjoyment by one transferee is against the interest of the other?

(A) the rule of election is applied
(B) the rule of estoppel is applied
(C) the rule of priority is applied
(D) the rule of thumb is applied

ஒரே சொத்து அல்லது அதில் உள்ள நலன் பல நபர்களுக்கு மாற்றம் செய்யப்படுகிறது. அத்தகைய மாற்றம் மாற்றப்பெற்றவர்களில் ஒருவரின் உபயோகம் அல்லது அனுபவம் மற்ற மாற்றப்பெற்றவர்களின் நலனுக்கு எதிராக இருக்கிறது. இந்த சூழ்நிலையில்

(A) தேர்வு விதி பொருந்தும்
(B) முரண்தடை விதி பொருந்தும்
(C) முன்னுரிமை விதி பொருந்தும்
(D) அனுபவ விதி பொருந்தும்

67. Identify the incorrect statement in relation to Doctrine of Election :

(A) This rule will apply only when two properties are transferred by the same deed

(B) The owner of the property should get a direct benefit from the transfer

(C) The person professing to transfer property should have a right to transfer

(D) The period of limitation for election is one year

தேர்வு கோட்பாடு சம்பந்தமாக கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியல்ல?

(A) இக்கோட்பாடு இரண்டு சொத்துக்கள் ஒரே ஆவணத்தின் மூலம் உரிமை மாற்றம் செய்யப்படும்போது மட்டும் பொருந்தும்

(B) உரிமை மாற்றத்திலிருந்து சொத்தின் உரிமையாளர் நேரடியான அனுகூலத்தை பெறவேண்டும்

(C) சொத்தை உரிமை மாற்றம் செய்வதாக காட்டிக் கொள்ளும் நபர் அதை உரிமை மாற்றம் செய்வதற்கான உரிமையை பெற்றிருக்க வேண்டும்

(D) தேர்வு செய்வதற்கான காலவரையறை ஒரு வருடம் ஆகும்

68. Which of the following is not an Actionable Claim?

(A) Right of Dower of Muslim women

(B) Right to recover insurance money after death or on maturity

(C) A claim for arrears of rent

(D) The right to recover damages for breach of a contract or tort

கீழ்கண்டவற்றில் எது செயல்படுத்தக்கூடிய உரிமைக் கோரல் இல்லை?

(A) இஸ்லாமிய பெண்ணுக்குரிய டவர் உரிமை

(B) இறந்தபின்னர் அல்லது முதிர்வடைந்த பின்னர் காப்பீட்டுத் தொகையை பெறுவதற்கான உரிமை

(C) வாடகை பாக்கியை கோருவதற்கான உரிமை

(D) ஒரு ஒப்பந்தத்தை மீறியதற்காக அல்லது தீங்கு இழைத்ததற்காக நஷ்ட ஈடு கோரும் உரிமை

69. A person, who has been ousted by a trespasser from the possession of immovable property to which he has merely possessory title , files a suit for recovery of possession after 6 months from the date of dispossession:

(A) Remedy for seeking possession extinguishes

(B) Can maintain a suit for possession

(C) Can file a suit for possession with a petition explaining the delay with sufficient cause

(D) Can only claim damages

அனுபவ உரிமையை மட்டும் கொண்டிருக்கும் ஒரு நபர் அசையா சொத்திலிருந்து அத்துமீறும் ஒரு நபரால் வெளியேற்றப்படுகிறார். அந்த நபர் வெளியேற்றப்பட்ட தேதியிலிருந்து 6 மாதம் கழித்து சொத்தின் சுவாதீனம் கோரி ஒரு வழக்கை தாக்கல் செய்கிறார்

(A) சுவாதீனப் பரிகாரம் அற்றுப்போனது

(B) சுவாதீனப் பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்யலாம்

(C) கால தாமதத்திற்குரிய போதுமான காரணத்தை மனுமூலம் கூறி சுவாதீனம் கோரி வழக்கை தாக்கல் செய்யலாம்

(D) நஷ்ட ஈடு மட்டுமே கோர முடியும்

Adda247

70. Which one of the following is incorrect statement?

(A) In civil cases, character evidence is inadmissible, unless the character of a party is a fact in issue

(B) In criminal cases, the fact that the person accused is of a good character, is irrelevant

(C) A previous conviction is relevant as evidence of bad character in criminal cases

(D) In criminal proceedings, evidence of bad character is admissible, when evidence of good character has been given

கீழ்கண்டவற்றில் எது தவறான கூற்று?

(A) உரிமையியல் வழக்குகளில், ஒரு தரப்பினரின் நடத்தை பிரச்சனையாக இல்லாத போது, நடத்தை பற்றிய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை

(B) குற்றவழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவர் நல்ல நடத்தையை உடையவர் என்ற சங்கதி, தொடர்பில்லாதது ஆகும்

(C) குற்றவழக்கில், முந்தய தண்டனை என்பது கெட்ட நடத்தை பற்றிய சாட்சியத்திற்கு தொடர்புடையது ஆகும்

(D) குற்றவியல் நடவடிக்கைகளில், நன்னடத்தை பற்றிய சாட்சியம் கொடுக்கப்படும்போது, கெட்ட நடத்தை பற்றிய சாட்சியம் ஏற்றுச் கொள்ளக் கூடியது.

71. Hearsay evidence is generally inadmissible. However, in certain cases, it is admissible. Which of the following is such a case?

(A) Res gestae

(B) Admission and confession

(C) Dying declaration

(D) All of the above

கேள்விபட்ட சாட்சியம் பொதுவாக ஏற்கத்தக்கதில்லை எனினும் சில குறிப்பிட்ட வழக்குகளில் அது ஏற்கத்தக்கதாகும் கீழ்க்கண்ட எத்தகைய வழக்கில் அதை ஏற்கலாம்?

(A) ஒன்றிய செயல்

(B) ஒப்புக்கொள்ளுதல் மற்றும் ஒப்புதல் வாக்கு மூலம்

(C) மரண வாக்கு மூலம்

(D) மேலே கண்ட அனைத்தும்

72. Due execution of a document more than thirty years old coming from proper custody, is a

(A) Presumption of fact

(B) Rebuttable presumption of law

(C) Irrebuttable presumption of law

(D) Presumption of fact and law both

உரிய நபரிடமிருந்து (உடைமையிலிருந்து) வரும் 30 வருடத்திற்கும் மேற்பட்ட ஆவணத்தின் நிறைவேற்ற குறித்த அனுமானம் என்பது

(A) சங்கதி பற்றிய அனுமானம்

(B) சட்டம் பற்றிய தள்ளுபடி செய்யக்கூடிய அனுமானம்

(C) சட்டம் பற்றிய தள்ளுபடி செய்ய முடியாத அனுமானம்

(D) சங்கதி மற்றும் சட்டம் பற்றிய அனுமானம்

73. Which of following is not amongst the category of persons whose statements become relevant facts as per Section 32 of the Indian Evidence Act?

(A) A person who is dead

(B) A person who cannot be found

(C) A person who was in the judicial custody while giving statement and later died

(D) None of the above

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 32 ன் படி தொடர்புடைய சங்கதிகளாகும் வாக்கு மூலங்களில், கீழ்கண்ட எந்த நபரின் வாக்கு மூலம் வராது?

(A) இறந்த நபர்

(B) கண்டுபிடிக்கப்பட முடியாத நபர்

(C) நீதிமன்றக் காவலில் இருந்த போது வாக்கு மூலம் கொடுத்து பின்னர் இறந்து விட்ட ஒரு நபர்

(D) மேலே கண்ட எதுவும் இல்லை

74. B has written letters addressed to A, like wise A wrote letters to B. C is B's clerk, whose duty was to examine and file B's correspondence. D is B's broker, to whom B habitually submitted the letters purporting to be written by A for the purpose of advising with him thereon. Choose correct option from the following

(A) The opinions of B, C and D on the question whether the letter is in the handwriting of A, are relevant

(B) The opinions of B, C and D on the question whether the letter is in the handwriting of A are irrelevant because they have never seen him writing those letters

(C) The opinion of only B is relevant because the letters were addressed to B.

(D) The opinion of C is only relevant as it is in his course of business to handle and document those letters

B என்பவர் A என்பவருக்கு கடிதங்களை எழுதியிருக்கிறார். அதே போல் A யும் B க்கு கடிதங்களை எழுதியிருக்கிறார். C என்பவர் B யின் குமாஸ்தா. C ன் வேலை B க்கு வரும் கடிதங்களை ஆய்வு செய்து கோப்பில் வைப்பது ஆகும். D என்பவர் B என்பவரின் தரகர். A எழுதிய கடிதங்களை B என்பவர் D க்கு அறிவுறுத்தி D யிடம் ஒப்படைத்தார். கீழ்க்கண்டவற்றில் சரியானவற்றை தேர்வு செய்க

(A) கடிதத்தில் உள்ள கையெழுத்து A யின் கையெழுத்தா என்பது குறித்த B, C மற்றும் D ன் கருத்துரைகள் தொடர்புடையது

(B) கடிதத்தில் உள்ள கையெழுத்து A யின் கையெழுத்தா என்பது குறித்த B, C மற்றும் D ன் கருத்துரைகள் தொடர்பற்றவை ஏனெனில் அவர்கள் A கடிதங்களை எழுதியதை நேரடியாக பார்க்கவில்லை

(C) B என்பவரின் கருத்துரை மட்டுமே தொடர்புடையது ஏனெனில் கடிதங்கள் B க்கு மட்டுமே அனுப்பப்பட்டது

(D) C என்பவரின் கருத்துரை மட்டுமே தொடர்புடையது ஏனெனில் அவர் வழக்கமாக செய்யும் தொழிலில் அந்த கடிதங்களை கையாண்டிருக்கிறார்

75. Under section 9 of the Indian Evidence Act, which of the following identifications is relevant?

(A) Identification of accused

(B) Identification of deceased, victim body

(C) Identification of articles and vehicle

(D) All the above

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 9–ன் கீழ், கீழ்கண்ட அடையாளங்களில் எது தொடர்புடையது ஆகும்?

(A) குற்றம் சாட்டப்பட்ட வரை அடையாளம் காட்டுதல்

(B) இறந்தவரின் பிரேதத்தை அடையாளம் காட்டுதல்

(C) பொருட்கள் மற்றும் வாகனத்தை அடையாளம் காட்டுதல்

(D) மேலே கண்ட அனைத்தும்

76. Which among the following plea taken by the counsel for the accused binds the accused?

(A) plea dispensing with proof of a document

(B) plea of guilty

(C) to dispense with a witness by admitting a certificate issued by a doctor

(D) none of the above

கீழ்கண்டவற்றில் எந்த வாதத்தை குற்றம் சாட்டப் பட்டவருக்காக அவர் வழக்கறிஞர் எடுத்தால் அது குற்றஞ்சாட்டபட்ட வரை கட்டுப்படுத்தும்?

(A) ஒரு ஆவணத்தை நிரூபிப்பதை விலக்களிக்கும் வாதம்

(B) குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்

(C) மருத்துவர் வழங்கும் சான்றிதழை ஒப்புக்கொண்டு சாட்சியை விசாரிப்பதிலிருந்து விலக்களித்தல்

(D) மேலே கண்ட எதுவும் இல்லை

Adda247

77. 'A', 'B', 'C', D and E designed a plan to abduct and sexually assault G. The five accused abducted G and took her to an isolated building. While 'B' and 'C' held her down to the ground, 'A', D and E raped her. Suddenly, E grabbed G's neck and strangulated her to death. Which of the following statements is correct?

Statement 1 : 'A', 'B', 'C', D and E are guilty of the offence of gang rape and murder as there need not be an overt act to establish common intention, if common intention by meeting of minds is established.

Statement 2 : 'A', 'B', 'C', D and E are guilty of the offence of gang rape and murder because though they were doing separate acts, but all was done in furtherance of a common intention.

Statement 3 : 'A', 'B', 'C', D and E are guilty of the offence of gang rape and E alone will be guilty for the offence of murder as it is an act done not in furtherance of the common intention.

Statement 4 : 'A', 'D' and 'E' are guilty of the offence of gang rape, 'C' and 'B' are guilty of the offence of intentional aiding and 'E' alone will be guilty of murder as participation of all members in committing one act is required under common intention.

(A) Statements 1 and 2 are correct (B) Statement 4 alone is correct

(C) Statement 3 alone is correct (D) Statement 2 alone is correct

A, B, C, D மற்றும் E ஆகியோர்கள் G ஐ கடத்தி பாலியல் தொந்தரவு கொடுக்க திட்டம் தீட்டினார்கள். அவர்கள் G ஐ கடத்தி ஒரு தனிமையான கட்டிடத்திற்கு தூக்கிச் சென்றார்கள். அங்கு B மற்றும் C ஆகியோர் G ஐ தரையில் பிடித்துக் கொள்ள A, D மற்றும் E ஆகியோர் G ஐ கற்பழித்தார்கள். திடீரென்று E என்பவர் G ன் கழுத்தை பிடித்து நெரித்து கொன்று விட்டார். கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானவை?

கூற்று 1 : 'A', 'B', 'C', D மற்றும் E ஆகியோர் கூட்டமாக கற்பழித்த மற்றும் கொலை செய்த குற்றத்திற்குள்ளாவார்கள். ஏனெனில் எண்ணங்கள் ஒன்று சேர்ந்து பொது எண்ணம் நிரூபிக்கப்பட்டால் பொது எண்ணத்தை நிரூபிக்க வெளிப்படையான செயல் தேவையில்லை

கூற்று 2 : அவர்கள் அனைவரும் தனித்தனியான காரியங்களை செய்தாலும், பொதுவான எண்ணத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டே அனைத்து காரியங்களும் செய்யப்பட்டது. ஆகவே A, B, C, D மற்றும் E ஆகியோர்கள் கூட்டாக கற்பழித்தல் மற்றும் கொலை செய்தல் ஆகிய குற்றத்திற்குள்ளாவார்கள்

கூற்று 3 : A, B, C, D மற்றும் E ஆகியோர் கூட்டாக கற்பழித்தல் குற்றத்திற்கும் மற்றும் E கொலை குற்றத்திற்கும் உள்ளாவார். ஏனெனில் E ன் செயல் பொதுவான எண்ணத்தை நிறைவேற்றும் பொருட்டு செய்யப்படவில்லை

கூற்று 4 : A, D மற்றும் E கூட்டாக கற்பழித்தல் குற்றத்திற்கும், B மற்றும் C வேண்டுமென்றே உதவுதல் குற்றத்திற்கும், மற்றும் E மட்டும் கொலை குற்றத்திற்கும் உள்ளாவார்கள். ஏனெனில் ஒரு செயலை செய்ய அனைத்து உறுப்பினர்களின் பங்களிப்பும் பொதுவான எண்ணத்திற்கு தேவைப்படுகிறது

(A) கூற்றுகள் 1 மற்றும் 2 சரியானவை (B) கூற்று 4 மட்டும் சரியானது

(C) கூற்று 3 மட்டும் சரியானது (D) கூற்று 2 மட்டும் சரியானது

78. A is invited by B for a cup of tea. While B is in the kitchen preparing tea, A finds a golden ring on the table. He picks it up and places it somewhere in the room with the intention of dishonestly taking it away some time later. A commits:

(A) no offence
(B) criminal misappropriation
(C) attempt to commit theft
(D) theft

தேநீர் அருந்த A ஐ B அழைத்தார். B சமையலறையில் தேநீரை தயார் செய்து கொண்டிருந்தபோது, மேஜையின் மீதிருந்த ஒரு தங்க மோதிரத்தை எடுத்து, அதை பின்னர் எடுத்துச் செல்லலாம் என்ற நேர்மையற்ற எண்ணத்தில் அறையின் வேறு ஒரு இடத்தில் வைத்து விட்டார். A கீழ்கண்டவற்றில் எந்த குற்றத்தை இழைத்தவராவார்?

(A) குற்றம் எதுவும் இல்லை
(B) குற்றமுறு கையாடல்
(C) திருட முயற்சித்தல்
(D) திருட்டு

79. Bolam's test applies to

(A) Employer's negligence
(B) Medical negligence
(C) Environmental negligence
(D) Vicarious negligence

"போலம் சோதனை" எதற்கு பொருந்தும்?

(A) முதலாளியின் கவனக் குறைவு
(B) மருத்துவ கவனக் குறைவு
(C) சுற்றுப்புறச் சூழல் கவனக் குறைவு
(D) பகர கவனக்குறைவு

80. 'A' finds a valuable ring on the road. He immediately sells it without attempting to discover the owner. He is said to have committed:

(A) Fraud
(B) Theft
(C) Misappropriation
(D) No offence at all

சாலையில் விலை மதிக்கத்தக்க ஒரு மோதிரத்தை கண்டெடுத்த A என்பவர் அதன் உரிமையாளரை கண்டுபிடிக்க முயற்சி செய்யாமல் உடனடியாக விற்றுவிடுகிறார். கீழ்கண்டவற்றில் A எந்த குற்றத்தை செய்தவராகிறார்?

(A) ஏமாற்றுதல்
(B) திருட்டு
(C) கையாடல்
(D) எந்த குற்றமும் இல்லை

Adda247

81. Two known persons and 3 unidentified persons way laid Ramu and decamped with his jewels. Which of the following statements is correct.

(A) the two known persons can be convicted for dacoity

(B) the two known persons can be convicted for robbery

(C) only when all five are tried, the two known accused can be convicted for offence under dacoity

(D) the two known persons can be convicted for extortion

அடையாளம் தெரிந்த 2 நபர்களும், அடையாளம் தெரியாத 3 நபர்களும் சேர்ந்து ராமுவிடம் வழிப்பறி செய்து விட்டு நகைகளுடன் ஓடி விட்டார்கள். கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் கூட்டுக் கொள்ளைக்காக தண்டிக்கப்படலாம்

(B) அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் கொள்ளையடித்த குற்றத்திற்காக தண்டிக்கப்படலாம்

(C) ஐந்து நபர்களும் சேர்ந்து விசாரிக்கப்பட்டால் மட்டுமே, அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் கூட்டுக் கொள்ளைக்கான குற்றத்திற்காக தண்டிக்கப்படலாம்

(D) அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அச்சுறுத்தி பறித்தல் குற்றத்திற்காக தண்டிக்கப்படலாம்

Adda247

82. A Judicial Magistrate Court, tried an accused for committing an offence under Section 228 of IPC. At the same time, the accused was also tried by the High Court under the Contempt of Courts Act for the same occurrence.

(A) Proceedings by the Magistrate are barred under Section 10 of Contempt of Courts Act.

(B) The proceedings before High Court are barred under Section 10 of Contempt of Court Act.

(C) Magistrate has to wait till the disposal of the contempt proceedings pending before the High Court.

(D) Both the proceedings can be proceeded simultaneously.

இந்திய தண்டனை சட்டம் பிரிவு 228ன் கீழான குற்றத்திற்காக ஒரு நபரை நீதித்துறை நடுவர் விசாரித்தார். அதே சமயத்தில் அந்த நபர் நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தின் கீழ் அதே செயலுக்காக உயர் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டார்.

(A) நீதிமன்ற அவமதிப்பு சட்டம் பிரிவு 10ன் கீழ் நீதித்துறை நடுவரால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளது

(B) நீதிமன்ற அவமதிப்பு சட்டம் பிரிவு 10ன் கீழ் உயர்நீதிமன்றத்தின் முன் உள்ள நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளது

(C) உயர்நீதிமன்றத்தின் முன் நிலுவையில் உள்ள நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை முடிவடையும் வரை நீதித்துறை நடுவர் காத்திருக்கவேண்டும்

(D) இரண்டு நடவடிக்கைகளும் ஏக காலத்தில் விசாரிக்கப்படலாம்

Adda247

83. A fresh suit on the same cause of action is not barred when the plaint is -

(A) rejected under Order VII Rule 11 CPC

(B) dismissed under Order IX Rule 2 CPC

(C) dismissed under Order IX Rule 3 CPC

(D) All the above is correct

அதே வழக்கு மூலத்தின் அடிப்படையில் ஒரு புதிய வழக்கு தடை செய்யப்படவில்லை. ஒரு பிராது

(A) சி.பி.சி. கட்டளை VII விதி 11ன் கீழ் நிராகரிக்கப்படும்போது

(B) சி.பி.சி. கட்டளை IX விதி 2ன் கீழ் தள்ளுபடி செய்யப்படும்போது

(C) சி.பி.சி. கட்டளை IX விதி 3ன் கீழ் தள்ளுபடி செய்யப்படும்போது

(D) மேலே கண்ட அனைத்தும் சரி

84. Where an order for compensation against the plaintiff is passed under Section 95 of CPC ______________

(A) a suit for compensation in respect of such arrest, injunction or attachment can also be filed

(B) a suit for compensation in respect of such arrest, injunction or attachment is barred

(C) the amount of compensation awarded shall be adjusted in the amount of compensation awarded in a suit for compensation

(D) the amount of compensation awarded shall be of no consequences and the court can award compensation independently in a suit for compensation

உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 95ன் கீழ் நிறையீட்டு செலவுத் தொகை கொடுக்க வேண்டும் என்று வாதிக்கு எதிராக ஒரு உத்தரவு ஏற்பட்டால் ____________.

(A) அத்தகைய கைது, உறுத்துக் கட்டளை அல்லது பற்றுகை சம்பந்தமாக, நஷ்ட ஈடு கோரும் வழக்கை தாக்கல் செய்யமுடியும்

(B) அத்தகைய கைது, உறுத்துக் கட்டளை அல்லது பற்றுகை சம்பந்தமாக, நஷ்ட ஈடு கோரும் வழக்கு தடை செய்யப்பட்டுள்ளது

(C) கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையை நஷ்ட ஈடு கேட்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ள வேண்டும்

(D) ஏற்கனவே கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத் தொகை எந்த விளைவையும் ஏற்படுத்தாது. நஷ்ட ஈடு கேட்டு தாக்கல் செய்யும் வழக்கில் நீதிமன்றம் தனியாக நஷ்ட ஈட்டை வழங்கலாம்

85. In a suit for partition, the defendant claims right under a WILL and files a petition seeking stay of the suit under section 10 of CPC till the Probate Proceedings filed by him before the High Court is disposed of. Choose the most appropriate answer from among the following statements

(A) the petition is maintainable

(B) the petition is maintainable since the dispute in the suit and Probate Proceedings are interlinked with each other.

(C) the petition is not maintainable

(D) the petition is not maintainable since section 10 is not applicable to proceedings pending before High court

ஒரு பாக வழக்கில், உயிலின் அடிப்படையில் உரிமைகோரும் பிரதிவாதி, அவரால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விருப்புறுதி சான்றிதழுக்கான நடவடிக்கைகள் முடிவடையும் வரை வழக்கை நடத்தக்கூடாது என்று ஒரு தடை மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 10ன் கீழ் ஒரு மனுவை தாக்கல் செய்கிறார். கீழே கண்ட கூற்றுக்களில் எது மிகவும் பொருத்தமான கூற்று என்பதை கண்டறிக.

(A) மனு நிலை நிற்கத்தக்கது

(B) மனு நிலை நிற்கத்தக்கது ஏனெனில் வழக்கு மற்றும் விருப்புறுதி சான்றிதழ் நடவடிக்கைகளில் உள்ள பிரச்சனை ஒன்றுடன் ஒன்று கலந்தது ஆகும்

(C) மனு நிலை நிற்கத்தக்கதில்லை

(D) மனு நிலை நிற்கத்தக்கதில்லை ஏனெனில் உயர் நீதிமன்றத்தின் முன்பு உள்ள நடவடிக்கைகளுக்கு பிரிவு 10 பொருந்தாது

86. A defendant has filed his written statement making an admission. Subsequently, he seeks the indulgence of the court to amend the written statement for deleting the admission made earlier under Order VI Rule 17 of C.P.C.

(A) The defendant cannot be permitted to amend the written statement

(B) The amendment sought can be allowed if it is filed before the commencement of trial

(C) Amendment can be allowed even under the proviso to Order 6 Rule 17 of CPC

(D) Both (B) and (C)

பிரதிவாதி ஒரு ஒப்புதலுரையுடன் எதிர் வழக்குரை தாக்கல் செய்திருக்கிறார். பின்னர் எதிர் வழக்குரையை திருத்தம் செய்து ஒப்புதலுரையை நீக்கிவிட உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை VI விதி 17 ன் கீழ் ஒரு மனுவை தாக்கல் செய்கிறார்.

(A) எதிர் வழக்குரையை திருத்தம் செய்ய பிரதிவாதியை அனுமதிக்க முடியாது

(B) வழக்கு விசாரணைக்கு முன்னர் மனு தாக்கல் செய்யப்பட்டால் எதிர் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்கலாம்

(C) கட்டளை VI விதி 17ன் நிபந்தனை ஷரத்தின் கீழ் திருத்தத்தை அனுமதிக்கலாம்

(D) (B) மற்றும் (C)

Adda247

87. Statement 1: In a case, ad interim injunction was not granted and notice to the respondent was ordered. The plaintiff can file an appeal against the same.

Statement 2: In a case, ad interim injunction was granted and notice to the respondent was ordered. The defendant can file an appeal against the same.

Which of the above statements is correct.

(A) both the statements are correct

(B) both the statements are incorrect

(C) statement 1 alone is correct

(D) statement 2 alone is correct

கூற்று 1 : ஒரு வழக்கில், இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்கப்படவில்லை மற்றும் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்ப உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவுக்கெதிராக வாதி மேல் முறையீட்டை தாக்கல் செய்ய முடியும்.

கூற்று 2 : ஒரு வழக்கில், இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்கப்பட்டதுடன் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பவும் உத்தரவிடப்பட்டது. அந்த உத்தரவுக்கெதிராக பிரதிவாதி மேல் முறையீட்டை தாக்கல் செய்ய முடியும்.

மேலே கண்ட கூற்றுகளில் எது சரியானது?

(A) இரண்டு கூற்றுக்களும் சரி

(B) இரண்டு கூற்றுக்களும் சரியல்ல

(C) கூற்று 1 மட்டும் சரி

(D) கூற்று 2 மட்டும் சரி

88. A step mother can claim maintenance under Section 125 of Cr PC from her step son

(A) Provided she is childless and widow

(B) Provided she is childless, and her husband is incapable of supporting and maintaining her

(C) Provided her husband is capable of supporting and maintaining her

(D) Both (A) and (B)

கீழ்கண்ட எந்த சூழ்நிலையில் ஒரு மாற்றாந்தாய் குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125ன் கீழ் மாற்றாம் மகனிடம் பராமரிப்புத் தொகை கோர முடியும்?

(A) அவர் விதவையாக இருந்து மற்றும் குழந்தை இல்லை எனில்

(B) அவருக்கு குழந்தை இல்லையெனில் மற்றும் அவரது கணவர் அவரை பராமரிக்க முடியாமல் இருந்தால்

(C) அவரது கணவர் அவளை பராமரிக்க முடியுமெனில்

(D) (A) மற்றும் (B)

89. Under Section 53 of CrPC, which of the following statements is correct?

Statement 1: Only at the instance of the Police Officer not below the rank of the Sub-Inspector, medical examination of the accused can be ordered.

Statement 2: Victim/ defacto complainant can also seek for medical examination of the accused through an order of the court.

Statement 3: The court can suo moto order for medical examination of the accused.

(A) All the 3 statements are correct (B) Statements 1 and 3 are correct

(C) Statements 2 and 3 are correct (D) Statements 1 and 2 are correct

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 53ன் கீழ் கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

கூற்று 1 : உதவி ஆய்வாளருக்கு குறையாத ஒரு காவல்துறை அலுவலரின் கோரிக்கையின் பேரில் மட்டுமே, குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை மருத்துவ பரிசோதனை செய்ய உத்தரவிட முடியும்.

கூற்று 2 : பாதிக்கப்பட்டவர்/புகார்தார் ஆகியோர்களும் நீதிமன்ற உத்தரவு மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவரை மருத்துவ பரிசோதனை செய்ய கோர முடியும்.

கூற்று 3 : நீதிமன்றம் தானாகவே குற்றஞ்சாட்டப்பட்டவரை மருத்துவ பரிசோதனை செய்ய உத்தரவிடலாம்.

(A) மேற்கூறிய மூன்று கூற்றுக்களும் சரி (B) கூற்றுக்கள் 1 மற்றும 3 மட்டும் சரி

(C) கூற்றுகள் 2 மற்றும் 3 மட்டும் சரி (D) கூற்றுக்கள் 1 மற்றும் 2 மட்டும் சரி

Adda247

90. Which among the following statements is not true with respect to information to police?

Statement 1: The report must be given by a person who has personal knowledge of the incident

Statement 2: The informant need not be an eye witness to the incident.

Statement 3: FIR can be used to corroborate or contradict the maker of the statement.

(A) Statement 1

(B) Statement 2

(C) Statement 3

(D) Statement 2 and 3

காவல்துறைக்கு தகவல் தெரிவிப்பது சம்பந்தமாக கீழ்கண்ட கூற்றுக்களில் எது தவறானது?

கூற்று 1 : சம்பவத்தைப் பற்றி சுயமாக தெரிந்த நபர் மட்டுமே தகவல் கொடுக்க வேண்டும்.

கூற்று 2 : தகவல் கொடுப்பவர் சம்பவத்தை நேரடியாக பார்த்த சாட்சியாக இருக்க வேண்டிய அவசியமில்லை

கூற்று 3 : முதல் தகவல் அறிக்கையை அதை கொடுத்தவரின் வாக்குமூலத்தை உறுதிப்படுத்தவோ அல்லது முரண்படுத்தவோ பயன்படுத்தலாம்.

(A) கூற்று 1

(B) கூற்று 2

(C) கூற்று 3

(D) கூற்றுகள் 2 மற்றும் 3

91. Which of the following circumstances attract section 195(i) b (ii) of CrPC

1. Plaintiff produced a forged WILL and the suit claim was negatived.

2. Defendant while perusing court records, made alteration in a promissory note.

3. Petitioner filed forged rent receipt before the Rent Controller

(A) All the three

(B) First situation only

(C) Second situation only

(D) Both 1 and 2

கீழ்கண்டவற்றில் எந்த சூழ்நிலை கு.வி.மு.ச பிரிவு 195 (i) b (ii) க்கு பொருந்தும்?

1. வாதி போலியாக தயாரிக்கப்பட்ட உயிலை தாக்கல் செய்தார் வழக்கு அவருக்கு எதிராக தீர்ப்பாகியது.

2. பிரதிவாதி, நீதிமன்ற ஆவணங்களை பார்வையிடும்போது கடனுறுதிச் சீட்டில் திருத்தம் செய்து விட்டார்

3. வாடகை கட்டுப்பாட்டாளர் முன்பு மனுதார் போலியாக தயாரிக்கப்பட்ட வாடகை ரசீதுகளை தாக்கல் செய்தார்.

(A) மேற்கூறிய மூன்று சூழ்நிலைகளும்

(B) சூழ்நிலை 1 மட்டும்

(C) சூழ்நிலை 2 மட்டும்

(D) இரண்டும் 1 மற்றும் 2

Adda247

92. Who among the following are the persons aggrieved and are entitled to prosecute for offence punishable under chapter XXI of IPC

1. defamation alleging unchastity of a wife suspended from service on the said allegation. Her husband has filed complaint as aggrieved person.

2. news paper article published against husband's laches in his official work- his wife has filed complaint as aggrieved person.

3. where defamation is made against the office bearers of the association-one of the members of the said association has filed complaint as aggrieved person

(A) Illustration 1 and 2 alone

(B) None of the persons mentioned as aggrieved in the Illustrations

(C) Illustration 2 and 3 alone

(D) All the persons mentioned as aggrieved in the illustrations

கீழ்கண்ட நபர்களில் யார் பாதிப்படைந்தவர் மற்றும் இ.த.ச. அத்தியாயம் XXI ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்களுக்கு வழக்கை தாக்கல் செய்ய உரிமையுடையவர்கள் ஆவார்கள்?

1. நெறி தவறியவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் வேலையிலிருந்து ஒரு பெண் இடைக்கால பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். நெறிதவறினார் என்பதற்கெதிராக அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது – பாதிக்கப்பட்ட நபர் என்ற முறையில் அவளது கணவர் புகாரை தாக்கல் செய்திருக்கிறார்

2. கணவர் அவருடைய அலுவலில் குறைகளை செய்திருக்கிறார் என்று செய்தித்தாளில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது – அவரது மனைவி பாதிக்கப்பட்ட நபர் என்ற முறையில் புகாரை தாக்கல் செய்திருக்கிறார்.

3. ஒரு சங்கத்தின் அலுவலக பொறுப்பாளர்களுக்கெதிராக அவதூறு இழைக்கப்பட்டுள்ளது. அந்த சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவர் பாதிக்கப்பட்ட நபர் என்ற முறையில் புகாரை தாக்கல் செய்திருக்கிறார்.

(A) உதாரணம் 1 மற்றும் 2 மட்டும்

(B) உதாரணங்களில் பாதிக்கப்பட்ட நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ள எந்த நபரும் இல்லை

(C) உதாரணங்கள் 2 மற்றும் 3 மட்டும்

(D) உதாரணங்களில் பாதிக்கப்பட்ட நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் அனைவரும்

93. Illustration 1 : In a case and counter, one case comes to the Magistrate by way of private complaint while the other case goes to the police. The Magistrate was informed that the counter case is pending investigation before the police.

Illustration 2 : In a case and counter, one case comes to the Magistrate by way of private complaint and it involves offences triable by the Court of Sessions, While the other case goes to the police. The Magistrate was informed that the counter case is pending investigation before the police.

Illustration 3 : A Labour Officer files a private complaint before the Judicial Magistrate.

In which of the above illustrations, enquiry under Section 202 of CrPC can be ordered by the Judicial Magistrate.

(A) All the three
(B) Illustration 1 only
(C) Illustration 2 only
(D) Illustration 2 and 3 only

உதாரணம் 1 : ஒரு வழக்கு மற்றும் எதிர் வழக்கில் ஒரு வழக்கு மட்டும் தனிப் புகார் மூலம் நீதித்துறை நடுவரிடம் வருகிறது மற்றொரு வழக்கு காவல்துறைக்கு செல்கிறது. எதிர் வழக்கு காவல்துறையினரிடம் புலன் விசாரணையில் இருக்கிறது என்று நீதித்துறை நடுவரிடம் தெரிவிக்கப்படுகிறது

உதாரணம் 2 : ஒரு வழக்கு மற்றும் எதிர் வழக்கில் அமர்வு நீதிமன்றத்தில் மட்டுமே விசாரிக்கக்கூடிய ஒரு வழக்கு தனிப் புகார் மூலம் நீதித்துறை நடுவருக்கு வருகிறது. மற்றொரு வழக்கு காவல்துறைக்கு செல்கிறது. எதிர்வழக்கு காவல்துறையிடம் புலன்விசாரணையில் இருக்கிறது என்று நீதித்துறை நடுவருக்கு தெரிவிக்கப்படுகிறது.

உதாரணம் 3 : தொழிலாளர் அலுவலர் ஒருவர் நீதித்துறை நடுவரிடம் ஒரு தனிப்புகார் மனுவை தாக்கல் செய்கிறார்.

மேற்கூறிய உதாரணங்களில் எதில் நீதித்துறை நடுவர் கு.வி.மு.ச. பிரிவு 202 ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிட முடியும்?

(A) மேற்கூறிய மூன்று உதாரணங்களிலும்
(B) உதாரணம் 1 ல் மட்டும்
(C) உதாரணம் 2 ல் மட்டும்
(D) உதாரணம் 2 மற்றும் 3 மட்டும்

Adda247

94. After preliminary assessment of a Juvenile in conflict with law, the Juvenile Justice Board referred the case to the Children Court for trying the heinous offence. The Children Court remanded the case back to the Juvenile Justice Board for proceeding against the juvenile.

Statement 1 : The Children Court cannot remand the case back to the Juvenile Justice Board

Statement 2 : The Children Court can remand the case back to the Juvenile Justice Board

Statement 3 : Shunting the Juvenile back and forth between forums is violative of the rights of the juvenile.

(A) statements 1 and 3 are correct
(B) statement 2 alone is correct
(C) statement 1 alone is correct
(D) statement 3 alone is correct

சட்டத்துடன் முரண்பட்ட ஒரு இளஞ்சிறாரை முதல் கட்ட மதிப்பீட்டிற்கு பின்னர், இளஞ்சிறார் குழுமம் கொடுமையான குற்றங்களை விசாரிக்க, குழந்தைகள் நீதிமன்றத்திற்கு வழக்கை அனுப்பியது. குழந்தைகள் நீதிமன்றம் அவ்வழக்கை மீண்டும் இளஞ்சிறார். குழுமத்திற்கு விசாரணைக்கு அனுப்பி வைக்கிறது.

கூற்று 1 : குழந்தைகள் நீதிமன்றம் அவ்வழக்கை மீண்டும் இளஞ்சிறார் குழுமத்திற்கே திருப்பி அனுப்ப முடியாது.

கூற்று 2 : குழந்தைகள் நீதிமன்றம் அவ்வழக்கை மீண்டும் இளஞ்சிறார் குழுமத்திற்கே திரும்ப அனுப்ப முடியும்.

கூற்று 3 : இரண்டு நீதிமன்றங்களுக்கும் இடையே இளஞ்சிறாரை அலையவிடுவது இளஞ்சிறார்களுக்குரிய உரிமையை மீறுவதாகும்.

(A) கூற்று 1 மற்றும் 3 சரி
(B) கூற்று 2 மட்டும் சரி
(C) கூற்று 1 மட்டும் சரி
(D) கூற்று 3 மட்டும் சரி

95. An accused was tried for triple murder and sentenced to life imprisonment. The conviction was confirmed by the Supreme Court. After serving substantial years in prison, the convict filed a petition before the Judicial Magistrate Court raising the plea of juvenility. Which of the following statements is correct?

(A) The petition before the Judicial Magistrate is maintainable
(B) The petition ought to be filed before the trial court
(C) The petition should be filed before the Supreme Court which had last confirmed the life imprisonment
(D) The petition should be filed only before the Juvenile Justice Board

மூன்று கொலைகளை செய்த ஒரு குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டு அது உச்ச நீதிமன்றத்திலும் உறுதி செய்யப்பட்டது. கணிசமான காலத்தை சிறையில் கழித்த பின்னர் குற்றவாளி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்பு, தான் ஒரு இளஞ்சிறார் என்று கூறி ஒரு மனுவை தாக்கல் செய்தார். கீழ்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

(A) நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன் தாக்கல் செய்யப்பட்ட மனு நிலை நிற்கத்தக்கது
(B) மனுவை விசாரணை நீதிமன்றத்தில்தான் தாக்கல் செய்திருக்க வேண்டும்
(C) ஆயுள் தண்டனையை கடைசியாக உறுதி செய்த உச்சநீதிமன்றத்தில் தான் மனுவை தாக்கல் செய்ய வேண்டும்
(D) இளஞ்சிறார் குழுமத்திடம் தான் மனுவை தாக்கல் செய்ய வேண்டும்

96. Definition of an "intermediary" includes

(A) Cyber Café
(B) Network Service Provider
(C) Online Shopping Platform
(D) All of the above

இடையீட்டாளர் என்பது

(A) கணினி மையம்
(B) இணைய சேவை வழங்குபவர்
(C) இணைய வழி பொருள் வாங்கும் தளம்
(D) மேலே கண்ட அனைத்தும்

97. The Information Technology Act makes the following acts punishable by life imprisonment

(A) Hacking
(B) Cheating by Impersonation
(C) Data Theft
(D) None of the above

கீழ்க்கண்டவற்றில் எந்த செயலுக்கு தகவல் தொழில்நுட்ப சட்டம் ஆயுள் தண்டனையை விதிக்கிறது?

(A) ஹேக்கிங்
(B) ஆள்மாறாட்டம் மூலம் மோசடி செய்தல்
(C) டேட்டாவை திருடல்
(D) மேலே கண்ட எதுவும் இல்லை

98. Which of the following statements is correct?

Statement I : Digital Signature and Electronic Signature are the same.

Statement II : Digital Signature is technology neutral.

(A) Both the statements are correct
(B) Both the statements are incorrect
(C) Statement I is correct, Statement II is incorrect
(D) Statement I is incorrect, Statement II is correct

கீழ்க்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?

கூற்று I : எண்சார் கையெழுத்து மற்றும் மின்னணு கையெழுத்து ஆகிய இரண்டும் ஒன்றுதான்.

கூற்று II : எண்சார் கையெழுத்து என்பது தொழில்நுட்ப நடுநிலை ஆகும்.

(A) மேற்கூறிய இரண்டு கூற்றுக்களும் சரி
(B) மேற்கூறிய இரண்டு கூற்றுக்களும் சரியல்ல
(C) கூற்று I சரி. கூற்று II சரியல்ல
(D) கூற்று I சரியல்ல. கூற்று II சரியானது

Adda247

99. Joseph, a watchman of a factory, was allowed to occupy the factory quarters and from his salary, a portion was deducted as charges for the quarters

(A) The fee deducted would come within the definition of rent

(B) Unless the payment is specific towards the rent for the premises, the payment is not toward rent

(C) It is only permissive occupation Hence, the question of payment of rent would not arise

(D) When no receipt was issued for the payment made, it is not rent

ஒரு தொழிற்சாலையின் காவலரான ஜோசப் என்பவர் அத்தொழிற்சாலையின் குடியிருப்பில் குடியிருக்க அனுமதிக்கப்பட்டார். குடியிருப்பு கட்டணமாக அவரது சம்பளத்தின் ஒரு பகுதி பிடித்தம் செய்யப்பட்டது

(A) பிடித்தம் செய்யப்பட்ட கட்டணம் வாடகை என்ற வரையறைக்குள் வரும்

(B) கட்டிட வாடகைக்கு என்று கட்டணம் குறிப்பாக இல்லையெனில், கட்டணம் வாடகை ஆகாது

(C) அது அனுமதியின் பேரிலான குடியிருப்பு அகும். ஆகவே வாடகை செலுத்துதல் என்ற கேள்வியே எழாது

(D) செலுத்திய கட்டணத்திற்கு ரசீது கொடுக்கப்படாத போது, அது வாடகை இல்லை

Adda247

100. If an investment increases from Rs. 800 to Rs. 1,100, what is the percentage of increase?

(A) 37.5% (B) 39%

(C) 40.5% (D) 42%

ஒரு மூலதனம் ரூ. 800-லிருந்து ரூ. 1,100-க்கு உயர்ந்தால். எவ்வளவு சதவிகிதம் அது உயர்ந்தது?

(A) 37.5% (B) 39%

(C) 40.5% (D) 42%

SPACE FOR ROUGH WORK

Adda247

SPACE FOR ROUGH WORK

Adda247

SPACE FOR ROUGH WORK

Adda247

Question Booklet Code : **AAA**

Register Number

## 2019

## DEGREE STANDARD

**Duration : Three Hours]** **[Maximum Marks : 100**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

### IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains **100** questions. Before answering the questions, you are requested to check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. **If any defect is noticed in the question booklet, it shall be reported to the Invigilator within first 10 minutes and get it replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.**
3. Answer **all** the questions. **All the** questions carry equal marks. **0.25 marks will be deducted for each incorrect answer.**
4. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
5. An answer sheet will be supplied to you separately by the Invigilator to mark the answers.
6. You shall encode your Question Booklet Code in the space provided on page 2 of the answer sheet with Blue or Black ink Ball point pen. If you do not encode properly or fail to encode the above information, your answer sheet will be invalidated.
7. Each question comprises **four** responses : i.e. (A), (B), (C) and (D). You have to select ONLY ONE correct response and mark the same in your answer sheet. If you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question.
8. In the Answer Sheet there are **four** circles (A), (B), (C) and (D) against each question. To answer the questions, you have to shade the circle of your choice (ONLY ONE) for each question with Blue or Black in Ball point pen. For a particular question, if (B) is the correct answer, you have to mark your answer as below :

   (A) ● (C) (D)

9. If you mark more than one answer for a question, the answer will be treated as wrong.
10. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the time of examination. After the examination, you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
11. **You should not make any marking in the question booklet except in the sheet before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.**
12. In all matters, the English version is final.
13. You have to write and shade the total number of answer fields left blank on the boxes provided on page 2 of OMR Answer Sheet. An extra time of 5 minutes will be provided for this purpose.
14. The facts and particulars given in the question booklet i.e. name of court, place, name of parties etc. are fictional and may not be true in real and legal sense. Yet you have without interpreting them in any other manner.
15. You shall answer on the given facts alone. You shall not assume or presume any additional facts.
16. Failure to comply with any of the above instructions will render you liable for such action or penalty as the Commission may decide at their discretion.



SEAL
Adda247